விலை: 30.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii



E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 15 புதன்கிழமை (29.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161


## கிளிநொச்சி மக்களின் பிரச்சினை தொடர்பில்

### ஆளுநருடன் சிறீதரன் பேச்சு



(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. 24

## இலங்கையில் இந்திய தேசிய புலனாய்வு அதிகாரிகள்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21ம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக, இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவின் அதி 23

## வயிற்றோட்டம் காரணமாக சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் நேற்றைய தினம் உயிரிழந்தார்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 2ல் கல்வி கற்கும் கோப் பாயைச் சேர்ந்த ச.அபிகரன் (வயது7) என்ற மாணவரே இவ்வாறு 24

# ஐ.தே.க அரசின் ஆட்சியிலேயே சிறுபான்மையினர் ஒடுக்கப்படுகின்றனர்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க ஆட்சிக் காலப்பகுதியில் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் அதிகமான ஒடுக்குமுறைகளை எதிர்நோக்கியதாக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1983 ஆம் ஆண்டு தற்போதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் மீதான கறுப்பு ஜூலைக் 23

## பயண எச்சரிக்கையை தளர்த்தியது இந்தியா

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை இந்தியா தளர்த் 24

## பாராளுமன்றத் தெரிவுக்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய 23

## தெரிவுக்குழுவால் எந்த பயனுமில்லை – அஸ்கிரிய பீடம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் திருப்தியளிக்கவில்லை என அஸ்கிரிய 23

## அடிப்படைவாதிகளினால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு

### சபாநாயகர் கரு ஜயசூரிய



(கொழும்பு)

சில அடிப்படைவாத முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவது முஸ்லிம் மக்களே எனத் தெரிவித்த சபாநாயகர். 24

## அமைச்சர் ரிஷாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

### கூட்டமைப்பு அவசரப்பட்டு முடிவெடுக்காது - மாவை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு கூடி அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் முடிவெடுக்கும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் 23

### நீதிமன்றின் கட்டளைப்படி

## நீராவியடிப் பிள்ளையார் என ஆலயத்தின் பெயர் மாற்றம்

(முல்லைத்தீவு)

பௌத்த பிக்குவால் கணதேவி தேவாலயம் என பெயர்மாற்றப்பட்ட நீராவியடி பிள்ளையார் ஆலய பெயர்ப்பலகை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் கட்டளைப்படி 23

## 6 ஆயிரம் பெண்களுக்கு கண்டியிலும் கருத்தடை!

### எஸ்.பி.திஸாநாயக்க அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

குருநாகலில் வைத்தியர் ஒருவர் கருத்தடை சிகிச்சையளித்ததாக கிளம்பிய பரபரப்பு அடங்குவதற்குள் புதிய குண்டை போட்டுள்ளார் எஸ்.பி.திசாநாயக்க எம்.பி. கண்டியில் இரண்டு 23

### 119 முறைப்பாடுகள்

## குருநாகல் மருத்துவருக்கு எதிராக இதுவரை பதிவு

(கொழும்பு)

குருநாகல் போதனா மருத்துவமனையின் மருத்துவர் சேகு சியாப்தீன் மொஹமட் சாஃபிக்கு 23

## ரிஷாத்தை ஆதரிக்க கூட்டமைப்புக்கு 5 பில்லியன் ரூபாய்


### சுதந்திரக்கட்சி வவுனியா அமைப்பாளர் சமிந்த

(குருமன்காடு)

பாராளுமன்றில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்த்து அமைச்சருக்கு ஆதரவளிப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்ட 23


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியைச் சேர்ந்த
திரு.சேரழகன் ஆசிரியரின்
பாசமிகு தந்தை

**அமரர் சின்னத்தம்பி முருகேசு**

அவர்கள் கடந்த 20.05.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
(C-6515) ***யா/கொக்குவில் இந்துக் கல்லூரி***

# நாய் கடிக்கு இலக்கான இரு பெண்கள் வைத்தியசாலையில்

நாயினால் கடியுண்ட இரண்டு பெண்கள் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கைதடி மேற்கில் நேற்றுக் காலை வீதியால் சென்ற இரு பெண்களைத் துரத்திக் கடித்த கட்டாக்காலி நாய் அந்த இடத்திலேயே வீழ்ந்து மரணமடைந்துள்ளது. அந்த நாய்க்கு விசர் நோயாக இருக்கலாம் அதனால்தான் நாய் உடனடியாக இறந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி மேற்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் செல்லம்மா (வயது-73) றாந்த் டஸ்னி (வயது - 36) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ம-114)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உட்பட
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(கி-6491)

# மரண அறிவித்தல்



## திருமதி ஞானாம்பிகை மீனாட்சி யோகுதாசன்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 11.07.1945 | 28.05.2019 |

பத்திரகாளி கோவில் ஒழுங்கை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாம்பிகை மீனாட்சி அவர்கள் நேற்று (28.05.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் யோகுதாசனின் அன்பு மனைவியும் சசிகலா (சுகாதார உதவியாளர்-யாழ்.போதனா வைத்தியசாலை), அமரர் ஸ்ரீதாசன், சுதாகர் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மருதங்கேணி), சிவகலா (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30/05/2019) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் (C-6517)

**பத்திரகாளி கோவில் ஒழுங்கை,
பருத்தித்துறை.**

**தகவல்:- குடும்பத்தினர்
0772296466**

# மரண அறிவித்தல்



## மதியாபரணம் மணிவண்ணன்

**(பணியாளர் - பிரதேச சபை, புதுக்குடியிருப்பு)**

முத்துஐயன்கட்டு எனும் இடத்தைப் பிறப்பிடமாகவும் 3ம் கண்டம் கற்சிலைமடு ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட மதியாபரணம் மணிவண்ணன் (பணியாளர் - பிரதேச சபை, புதுக்குடியிருப்பு) 27.05.2019 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2019) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்டயர்மலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6513)

**3ம் கண்டம், கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.**

**தகவல்:-
குடும்பத்தினர்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக சேவை அலுவலராக அரும்பணியாற்றி இலங்கை நிர்வாக சேவையின் (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சையில் தேசிய ரீதியில் இரண்டாவது இடம்பெற்று சித்தியடைந்ததன் மூலம் ஒரு நிர்வாக சேவை அலுவலராக தெரிவு செய்யப்பட்டுள்ள சமூகத் தொண்டன்


## திரு.வேலாயுதம் சிவராசா அவர்கள்

எதிர்காலத்திலும் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று தங்கள் சேவை மூலம் இம் மக்களும் மண்ணும் பெருமையுற வேண்டும் என மனதார பாராட்டி வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல கும்பழாவளைப் பெருமானின் ஆசி வேண்டி நிற்கின்றோம்.

தங்கள் பெருமையில் என்றும்
அளவெட்டி நண்பர்கள் சார்பாக **க.கணேசதாஸ் J.P**
***இளைப்பாறிய கிராம அலுவலர்***

(C-6511)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



30.04.2019 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் அப்பாபிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)

**உதயம்:23.06.1950**
**அஸ்தமனம்: 30.04.2019**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.05.2019 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்பட்டு 30.05.2019 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபீண்டீகரண பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.


**இங்ஙனம்:
குடும்பத்தினர்
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.**

(C-6509)

# துப்பாக்கி ஏந்திய தலைவர் பிரபாகரனே தமிழ் மக்களுக்கு இறுதிவரை ஆதரவு

- ❖ ஜனநாயகத் தலைவர் அமீரை விமர்சனம் செய்த ஜே.ஆர்
- ❖ தமிழ் மக்களுக்காகப் பேச நாடாளுமன்றில் யாருமில்லை
- ❖ முஸ்லிம்களையும் பயங்கரவாதத்துக்குள் தள்ள வேண்டாம்
- ❖ முஸ்லிம் அடிப்படைவாதிகளைப் பயன்படுத்துகின்றனர்

## சிங்கள இனவாதிகளைப் போட்டுத் தாக்கினார் ராஜித





(கொழும்பு)

துப்பாக்கிகள் ஏந்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்ற தலைவர்களே இறுதியாக தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தனர் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தலைவர்களை விமர்சனம் செய்து அவர்களுக்கு சேறு பூசி ஆயுதம் ஏந்திய பிரபாகரன் போன்ற பயங்கரவாதத் தலைவர்களை உருவாக்கியது போன்று தற்போதுள்ள முஸ்லிம் தலைவர்களுக்கு சேறு பூசி மீண்டும் ஆயுதமேந்தும் பயங்கரவாதத் தலைவர்களை உருவாக்க வேண்டாம்.

அன்று சாதாரண தமிழ் மக்களுக்கிடையில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அவர்களை விடுதலைப்புலிகளாக உருவாக்கியது போன்று இன்றுள்ள சாதாரண முஸ்லிம் மக்களுக்கிடையில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அவர்களையும் பயங்கரவாதத்திற்குள் தள்ள வேண்டாம்.

அமைச்சர் றிசாத் பதியூதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள தெரிவுக் குழுவின் மூலம் விசாரணைகள் செய்யப்படவுள்ளன. அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது அரசியல் தேவைக்கானது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னர் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து அதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

தற்போது, அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ள இந்த எதிர்க்கட்சியினரே அன்று ஒக்டோபர் மாதத்தில் ஆட்சியமைப்பதற்கு அழைத்தனர்.

ஆனால்அப்போது அவர்கள்செல்லாதிருந்தார்கள். ஆகவே இப்போது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதும் முற்றிலும் அரசியல் தேவைக்கானதாகும்.

அன்று அமைச்சர் றிசாத் பதியுதீனுடன் இணைந்திருந்தால் தற்போது அவருக்கு எதிராக எவ்வித நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டு வரப்பட்டிருக்க மாட்டாது.

றிசாத் பதியுதீன் போன்றோர் இந்த நாட்டின் ஜனநாயகத் தலைவர்கள். இவர்களுக்கெதிராக ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அது குறித்து விசாரணை செய்ய முடியும்.

அவர்கள் நாட்டை விட்டு ஓடிவிடவில்லை. அவர்கள் இந்த நாட்டில் தான் இருக்கின்றனர். இவர்களுக்கெதிரான இந்தச் செயற்பாடுகளைப் பார்க்கும்போது 1980, 83 களில் அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜனநாயகத் தலைவர் அமிர்தலிங்கத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன விமர்சனம் செய்து அவரை எதிர்க்கட்சி பதவியில் இருந்து நீக்கினார்.

அப்போது அவ்வாறு செய்ய வேண்டாமென நாங்கள் கூறினோம். இவ்வாறு செய்யும்போது இறுதியில் தமிழ் மக்களுக்கு பயங்கரவாதத் தலைவர்களே துணையாக இருப்பாரெனக் கூறினோம். இறுதியில் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தொடர்பாக பேசுவதற்கு யாரும் இல்லை.

அவர்களுக்கு இடமளிக்கவும் இல்லை. இறுதியில் அவர்களுக்கு துப்பாக்கிகள் மட்டுமே ஆதரவாக பேசுவதற்கு இருந்தன.

மேலும் துப்பாக்கிகள் ஏந்திய பிரபாகரன் போன்ற தலைவர்களே இறுதியாக தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தனர்.

இறுதியில் 1988ஆம் ஆண்டு பெரும் போராட்டத்திற்கு பின்னர் ஜனநாயக சூழலுக்கு அழைத்து வந்தோம். அன்று நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு எதிராக இருந்தாலும் 13ஆம் திருத்தத்தை கொண்டு வருவதற்கு முழு ஆதரவையும் வழங்கினோம்.

இறுதியில் துப்பாக்கி ஏந்தியவர்களை ஜனநாயக சூழலுக்குள் கொண்டு வந்தோம். அன்று எங்களுக்கு எதிராக இருந்து எங்களை மரணிக்கச் செய்தவர்கள் மாகாண சபைக்குச் சென்று அமர்ந்தனர்.

ஜனநாயகத் தலைவர்களை விமர்சனம் செய்து அவர்களுக்கு சேறு பூசி இறுதியில் விடுதலைப் புலிகள் போன்ற தலைவர்களையே உருவாக்க முயற்சிக்கின்றனர்.

சாதாரண முஸ்லிம் மக்களுக்கிடையில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அவர்களையும் பயங்கரவாதத்திற்குள் தள்ள முயற்சிக்கின்றனர். இதுவே தமிழ் மக்களுக்கும் இடம்பெற்றது. சாதாரண தமிழ் மக்களை விடுதலைப் புலிகளாக உருவாக்கினர்.

ஆனால் அன்று தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட சிங்கள அடிப்படைவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் அன்று சமாதானத்திற்காக பேசியவர்களையே கொலை செய்தனர்.

வடக்கு- தெற்கை இணைப்பதற்காக பேசியவர்களை விடுதலைப் புலிகள் கொலை செய்தனர். அன்று சிங்கள நடுநிலைப்பாடு கொண்டவர்களே அவர்களுக்கு பெரும் தலையிடியாக இருந்தனர்.

இன்று முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கும் சிங்கள நடுநிலைப்பாடு கொண்டவர்களே பெரும் தலையிடியாக இருக்கின்றனர்.

சிங்கள அடிப்படைவாதிகள் முஸ்லிம் அடிப்படைவாதிகளைப் பலப்படுத்துகின்றனர். தமிழ் மக்களுடைய உரிமைகள் தொடர்பில் பேசிய எங்களைப் போன்ற தலைவர்களுக்கே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

தற்போது அதேபோன்றதொரு செயற்பாட்டையே முன்னெடுக்கின்றனர். எனவே இருண்ட வரலாற்றை மீண்டும் உருவாக்க இடமளிக்க வேண்டாம்.

அன்று அமிர்தலிங்கம் போன்ற ஜனநாயகத் தலைவர்களுக்கு செய்ததை மீண்டும் முஸ்லிம் ஜனநாயகத் தலைவர்களுக்கு செய்ய வேண்டாம் என் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

## வைத்தியர் ஷாபிக்கு எதிராக வைத்தியசாலை முன் ஆர்ப்பாட்டம்



சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபிக்கு எதிராக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு முன் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறித்த வைத்தியரை அரசியல் தலையீட்டால் விடுதலை செய்ய தயாராகுவதாக கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. குருநாகல் நகரை மையப்படுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பயிற்சியில் மே.தீவுகள் எழுச்சி

## நியூசிலாந்தை வீழ்த்தி அபாரம்




சதம் அடித்த மே.தீவுகளின் சாய் ஹோப்

உலகக் கிண்ண பயிற்சி போட்டியில் அசத்திய மே.தீவுகள் அணி, 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது.

இங்கிலாந்தின் பிரிஸ்டல் நகரில் நடந்த ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பயிற்சி போட்டியில் நியூசிலாந்து, மே. தீவுகள் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

மே.தீவுகள் அணிக்கு கிறிஸ் கெய்ல் (36), எவின் லீவிஸ் (50) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. டரன் பிராவோ (25), ஷிம்ரன் ஹெட்மயர் (27) பெரிய அளவில் சோபிக்கவில்லை. அபாரமாக ஆடிய ஷாய் ஹோப் (101) சதம் கடந்து கைகொடுத்தார். நிக்கோலஸ் பூரான் (9) 'ரன் அவுட்' ஆனார். அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் (47) ஓரளவு கைகொடுத்தார்.

அபாரமாக ஆடிய ஆன்ட்ரி ரசல், 25 பந்தில் 54 ஓட்டங்கள் எடுத்தார். கார்லஸ் பிராத்வைட் (24) ஆறுதல் தர, மே.தீவுகள் அணி 49.2 ஓவரில் 421 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆஷ்லே நர்ஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் போல்ட் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**பிளன்டெல் சதம்**

கடின இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கப்டில் (5), நிக்கோல்ஸ் (15), றொஸ் ரெய்லர் (2) ஏமாற்றினர். அணித் தலைவர் வில்லியம்சன் (85), பிளன்டெல் (106) நம்பிக்கை அளித்தனர். நீஷம் (20), கிராண்ட் ஹோம் (23), சான்ட்னர் (19) நிலைக்கவில்லை. இஷ் சோதி (39) ஆறுதல் கொடுத்தார்.

நியூசிலாந்து அணி 47.2 ஓவரில், 330 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்து' தோல்வியடைந்தது. பெர்குசன் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மே.தீவுகள் சார்பில் கார்லஸ் பிராத்வைட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## ஸ்ரெய்ன் விலகல்

தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் காயம் காரணமாக, இங்கிலாந்துக்கு எதிரான உலக கிண்ண முதல் லீக் போட்டியிலிருந்து விலகினார்.

இங்கிலாந்து மண்ணில் நாளை ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதற்கான தென்னாபிரிக்க அணியில் 'சீனியர்' வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் (வயது-35), இடம்பெற்றுள்ளார். சமீபத்திய, ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணிக்காக விளையாடியபோது இவரது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டது. தொடரிலிருந்து பாதியில் விலகிய இவர் ஓய்வில் இருந்தார். தற்போது, காயம் முழுமையாக குணமாகாத காரணத்தால் இங்கிலாந்துக்கு எதிரான (மே 30, லண்டன்) முதல் உலக கிண்ண லீக் போட்டியிலிருந்து விலகினார்.

இது குறித்து தென்னாபிரிக்க பயிற்சியாளர் கிப்சன் கூறுகையில்," வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் இன்னும் முழுமையான உடற்தகுதி பெறவில்லை. உலக கிண்ணம் தொடர் 6 வாரம் நடப்பதால், இவருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. இங்கிலாந்துக்கு எதிரான முதல் லீக் போட்டியில் பங்கேற்க மாட்டார். இரண்டாவது போட்டியிலும் (எதிர் பங்களாதேஷ்) பங்கேற்பது சந்தேகம்தான். இந்தியாவுக்கு எதிராக (ஜூன் 5, சவுத்தாம்ப்டன்) நிச்சயமாக விளையாடுவார் என நம்புகிறோம்." என்றார்.

## அசரன்கா அசத்தல்

### பிரெஞ்ச் ஓபனில் முன்னேற்றம்



விக்டோரியா அசரன்கா

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றுக்கு அமெரிக்காவின் செரினா, பெலாரசின் அசரன்கா, பிரான்சின் கார்சியா உள்ளிட்டோர் முன்னேறினர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், நடப்பு ஆண்டின் 2வது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் விடாலியா டயட்சென்கோ மோதினர்.

முதல் செட்டை 2-6 என இழந்த செரினா, பின் எழுச்சி கண்டு 2வது செட்டை 6-1 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டில் மீண்டும் அசத்திய இவர், 6-0 என வென்றார். ஒரு மணி நேரம், 30 நிமிடம் நீடித்த போட்டியில் செரினா 2-6, 6-1, 6-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, 2வது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, லட்வியாவின் ஜெலினா ஆஸ்டபென்கோ மோதினர். இதில் அசரன்கா 6-4, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். பிரான்சின் கரோலின் கார்சியா 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஜேர்மனியின் மோனா பர்தெலை தோற் கடித்தார்.

மற்றைய முதல் சுற்றுப் போட்டிகளில் ரஷ்யாவின் டாரியா கசட்கினா, செக்குடியரசின் கரோலினா முசோவா, ஜப்பானின் குருமி நாரா, ருமேனியாவின் இரினாக மேலியா பெகு உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

**டெல் போட்ரோ வெற்றி**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அர்ஜென்டினாவின் மார்டின் டெல் போட்ரோ, சிலியின் நிக்கோலஸ் ஜாரி மோதினர். இரண்டு மணி நேரம், 7 நிமிடம் நீடித்த போட்டியில் டெல் போட்ரோ 3-6, 6-2, 6-1, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.




# 'கைநழுவாத' கைப்



மொஹமட் கைப்

உலக கிண்ண வரலாற்றில் 'களத்தடுப்பில்' சிறந்து விளங்கும் வீரர்களுக்கு பஞ்சம் அதிகம். இந்திய அணியை எடுத்துக் கொண்டால் மொஹமட் கைப், 'மின்னல் வேக' களத்தடுப்பாளராக ஜொலித்தார்.

கடந்த 2003ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் 'சுப்பர் 6' போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின.

முதலில் 'துடுப்பாட்டம்' செய்த இந்திய அணி 50 ஓவர்களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து களமிறங்கிய இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் மடமடவென சரிந்தன. இதற்கு மொஹமட் கைப் முக்கிய காரணம்.

இவரது துடிப்பான 'களத்தடுப்பில்' சிக்கிய இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். ஸ்ரீநாத் 'வேகத்தில்' அத்தபத்து, ஜெயசூர்ய கொடுத்த 'பிடி' வாய்ப்பை அப்படியே 'லபக்' செய்தார். பின் நிசங்க, முரளிதரன் ஆகியோர் அடித்த பந்தையும் சுப்பராக 'பிடி' எடுத்தார்.

இலங்கை அணி 109 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்திய அணி 183 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. நான்கு விக்கெட்டுக்கள் வீழ்ச்சிக்கு காரணமான கைப், உலக கிண்ண வரலாற்றில், ஒரு போட்டியில் அதிக 'பிடி' செய்து புதிய சாதனை படைத்தார். இவரது இச் சாதனையை கடந்த 2015ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் பங்களாதேஷின் சௌமியா சர்கார், பாகிஸ்தானின் உமர் அக்மல் (தலா 4 'பிடி') சமன் செய்தனர்.

**தெரியுமா?**

உலக கிண்ண அரங்கில் அதிக 'பிடி' எடுத்த இந்திய வீரர்கள் பட்டியலில் கும்ளே முன்னிலை வகிக்கிறார். இவர், 18 போட்டிகளில், 14 'பிடி' எடுத்தார். இவரை அடுத்து கபில் தேவ், சச்சின் தலா 12, சேவாக், அசார், ஜாகிர் கான் தலா 10 'பிடி' எடுத்தனர்.

ஒட்டுமொத்தமாக அதிக 'பிடி' எடுத்த வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் பொன்ரிங் (28 'பிடி', 46 போட்டி) முதலிடத்தில் உள்ளார்.

# அரையிறுதியில் யார்... யார்

## சச்சின் கணிப்பு



சச்சின்

உலக கிண்ண அரையிறுதிக்கு இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அல்லது பாகிஸ்தான் தகுதி பெற வாய்ப்பு உள்ளது, என சச்சின் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் உலக கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் 30ம் திகதி ஆரம்பமாகிறது. இதில், 10 அணிகள் பங்கேற்கின்றன. 'ரவுண்ட் றொபின்' முறையிலான லீக் சுற்றின் முடிவில் 'டொப் 4' இடங்கள் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதுகுறித்து இந்திய அணி 'ஜாம்பவான்' சச்சின் கூறியதாவது.

உலக கிண்ணம் போன்ற மிகப்பெரிய தொடர்களில் தேசிய அணிக்காக பங்கேற்பது என்பது, எந்த ஒரு கிரிக்கெட் நட்சத்திரத்துக்கும் பெருமையான விஷயம். இது, ஒரு நீண்ட தொடர். போட்டிகள் 'ரவுண்ட் றொபின்' முறையில் நடக்கின்றன. இதனால் திட்டமிட்டு சிறப்பாக செயற்படுவது மிக முக்கியம்.

தற்போதைய இந்திய அணி, 2015 உலக தொடரில் இருந்ததை விட முற்றிலும் வித்தியாசமானது. வேகப்பந்து வீச்சு 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா அணியில் இடம் பெற்றுள்ளது சிறந்த விஷயம். அதேபோல துடுப்பாட்டம், பந்துவீச்சில் கைகொடுக்கும் விஜய் சங்கர் உட்பட பல 'சகலதுறை வீரர்கள்' அணியில் உள்ளனர்.


'மிடில் ஓவர்களில்' பந்து வீசுவதற்கு சகால், குல்தீப் யாதவ் என நம்பிக்கையான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இவர்களுடன் கைகொடுக்க ஜடேஜாவும் இருப்பது கூடுதல் பலம். ஒட்டுமொத்தமாக பந்துவீச்சுப் பிரிவு முழு பலத்துடன் காணப்படுகிறது. அதே நேரம் 2015, 2019 அணிகளை ஒப்பிட்டு பார்ப்பது சரியல்ல.

ஒவ்வொரு போட்டியின் முடிவுக்குப் பின்பும் அணி குறித்து கருத்து தெரிவிக்க மாட்டேன். ஏனெனில் பெரிய தொடரில் வெற்றி, தோல்விகள் மாறி மாறி ஏற்படத்தான் செய்யும். முக்கிய போட்டிகள் இன்னும் ஆரம்பமாகவில்லை.

இதற்கு முன் சூழலுக்கு ஏற்ப தங்களை தயார் படுத்திக் கொள்ள இந்திய அணி வீரர்களுக்கு சற்று கால அவகாசம் தேவை என நினைக்கிறேன்.

உலகக் கிண்ணத் தொடரில் இம்முறை இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அல்லது பாகிஸ்தான் அணிகள் அரையிறுதிக்கு முன்னேற வாய்ப்புள்ளது. இவ்வாறு சச்சின் கூறினார்.

# கண்ணீர் காணிக்கை



தோற்றம் 28 10 1940

மறைவு 27 05 2019

சயன்ஸ் அக்கடமியின் உரிமையாளர்
திருமதி. வசந்தினி புவனேஸ்வரன் அவர்களின் தந்தையாரும்
அக்கடமியின் இயக்குநர்
சரா. புவனேஸ்வரன் அவர்களின் மாமனாருமான


## அமரர்.தம்பிஐயா பத்மநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெற
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(C-6906)

ஆசிரியர்கள், மாணவர்கள்,
சயன்ஸ் அக்கடமி நல்லூர், அரியாலை.

# கண்ணீர் அஞ்சலி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
கௌரவ பொதுச் செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன்
அவர்களின் மாமனார்

## அமரர்.தம்பிஐயா பத்மநாதன்

தோற்றம் : 28.10.1940 மறைவு : 27.05.2019

இறைபதம் அடைந்ததை அறிந்து அதிர்ச்சியுற்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுவதோடு, குடும்பத்தாரின்
துயரிலும் பங்கேற்கின்றோம்.

(C-6906)

ஆட்சிமன்ற உறுப்பினர்களும், உறுப்பினர்களும்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,

# றிசாத்துக்கு எதிரான வழக்கு விசாரணைத் திகதி அறிவிப்பு

வில்பத்து காணி பகிர்ந்தளித்தமை தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் விசாரணை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வில்பத்து சரணாலயத்தை அழித்து கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளை மீண்டும் அரசாங்கம் கையகப்படுத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி அறிவித்துள்ளது.

இந்த மனு முன்னதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மகிந்த சமயவர்தன முன்னிலையில் விசாரிக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட இருந்தது.

எனினும் மனுவை மீண்டும் விசாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அது எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதி ஜனக் டி சில்வா மற்றும் நிஷ்ஷங்க பந்துல கருணாரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (இ-7)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.

## ஆனந்தராஜா நற்குணராஜா



பிறப்பு 06 . 09 . 1962

இறப்பு 08 . 06 . 2018

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து
நிழலாகி விட்ட எம் அன்புச் செல்வமே
நீங்கள் காட்டிய பாதை வழியே நிதமும் தொடர்வோம் நாமே.


(6960)

இல 52, குமார வீதி,
நல்லூர்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர் தம்பிஐயா பத்மநாதன்



அரியாலையை பிறப்பிடமாகவும் இலக்கம் 01, கனகரட்ணம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பொறியியல் பகுதி உத்தியோகத்தர் தம்பிஐயா பத்மநாதன் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தின கோபால்-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், உமாமகேஸ்வரியின் அன்புக் கணவரும் சயந்தினி (பிரான்ஸ்), வசந்தினி, நிரஞ்சினி (நோர்வே), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முக நாதன், யோகராஜா மற்றும் கமலா, பத்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தவயோகராஜா மற்றும் பவானி, கலாநிதி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் திருநீலகண்டர், இரத்னேஸ்வரி, காலஞ்சென்ற தியாகரத்தினம் மற்றும் குகரத்தினம், கமலேஸ்வரி, பத்மேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் யோகநாதன் (பிரான்ஸ்), சரா.புவனேஸ்வரன் (பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்), மோகனதாஸ் (நோர்வே), கிருஷாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் வினித்தா, நில்லி, டிலானிகா, Dr.துவாரகா, சஞ்சிகா, ஜீசன், தர்மிகா, தாரதி, கதிரவன், சதுர்வன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரின் இல்லத்தில் 29.05.2019 இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 1, கனகரட்ணம் வீதி,
அரியாலை

(C-6505)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## இந்திரலிங்கம் சறோஜினிதேவி

தோற்றம் 1944 - 07 - 16

மறைவு 2018 - 06 - 10



10.06.2018 அன்று இறைபதமடைந்த இந்திரலிங்கம் சறோஜினிதேவி அவர்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி கிரியைகள் நாளை 30.05.2019 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றும் அன்றைய தினம் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊறணி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
கணவர் - இந்திரலிங்கம்

(C-6504)

# பேருந்து தரிப்பிடத்தில் குப்பை; பொதுமக்கள் விசனம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மருதனார்மடம் பேருந்து தரிப்பிடத்தில் உள்ள பேருந்து தரிப்பிடத்தினுள் குப்பைக் கழிவுகள் கொட்டியிருப்பதால் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-60)

# சட்டவிரோத மின் பாவனையாளரை மின்சார சபைக்கு 11 இலட்சத்து 37 ஆயிரம் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் மின் வழங்கலை மோசடியாகப் பயன்படுத்திய யாழ். பிறவுண் வீதியில் வசிக்கும் நபர் ஒருவருக்கு 11 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டை மின்சாரசபைக்கு வழங்க வேண்டுமென நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள வீட்டில் மின்சார சபையினரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச் சோதனை நடவடிக்கையின் போது மின் மானியில் (மீற்றர்) மோசடி இடம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த வீட்டு உரிமையாளர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது குறித்த நபரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியது.

இந் நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது மின்சாரத்தை மோசடியாகப் பெற்ற குற்றவாளியின் குடியிருப்பில் 4 குடும்பங்கள் வாழ்வதாகவும் நான்கு அறைகளுக்கும் வழிச்சீராக்கி (AC) பொருத்தப்பட்டுள்ளதோடு ஆடம்பரமான வீட்டு வசதிகளுடன் வாழ்ந்து வருவதாகப் பொலிஸார் நீதவான் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

குற்றத்தை ஒப்புக்கொள்வதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்த நிலையில் பொதுமக்களின் பாவனைக்காகச் செல்லும் மின்சாரத்தை தவறாகப் பயன்படுத்திய மைக்காக 50 ஆயிரம் ரூபாய் அபராதம் உடனடியாகச் செலுத்த வேண்டும் எனவும் மின்சார சபைக்கு ஏற்பட்ட 11 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டை ஒரு வாரத்துக்குள் செலுத்தி முடிக்க வேண்டுமென யாழ்ப்பாண நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார். (5-10)

# பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மரத்தை அகற்றக் கோரிக்கை

(கரணவாய்)

புத்தூரிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்துக்கு அருகாமையில் வாகை மரம் ஒன்று சாய்ந்து பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. அதன் அருகே உள்ள மதில் சுவர் விழும் நிலையில் உள்ளது. ரெலிகொம் வயர்கள்,மின்சார வயர்கள் இருப்பதனால் எந்த நேரத்திலும் அபாயம் ஏற்படலாம் என்பதால் அவ் வீதியால் பயணிப்போர் பயத்தின் மத்தியில் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




எனவே இவ் விடயம் தொடர்பாக உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-60)

# குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தின் வாழ்வாதார உதவிகள்



குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தினால் வாழ்வாதார உதவிகளும் கல்வி வளர்ச்சிக்கான உதவிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைப்பின் தலைவரால் குருநகர் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன. மேலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உறவுகள் விண்ணப்பிக்குமாறு செயலாளரினால் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ் வுதவிகள் மாதத்தில் வருகின்ற கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்கப்படும் என்றும் இந் நிகழ்வின் போது தெரிவிக்கப்பட்டது. (5-106)



காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் முன்னை நாள் தலைவரும் ஸ்தாபகர்களில் ஒருவருமான ம.சிவசுப்பிரமணியத்தின் பத்தாவது ஆண்டு நினைவையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், அருகிலுள்ள பாடசாலைகளுக்கும் முன்பள்ளிகளுக்கும் நீர் வடிகட்டும் கருவிகளும் வழங்கிவைக்கப்பட்டன.



கரவெட்டி பிரதேச செயலகத்தில் சமூகசேவை காரியாலயத்தில் மாற்றுத்திறனாளி பெண் ஒருவருக்கு மளிகை கூடம் அமைப்பதற்கு முதல்கட்டமாக 170,000 ரூபாய் வழங்கப்பட்டது. இந் நிகழ்விற்கு கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன், சமூக சேவை உத்தியோகத்தர் வரதபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-கரணவாய் செய்தியாளர்)

# இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பொருளாதார நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கற்பனை மிகுதியான நாள்.

**மேடம்:** கொடுக்கல்- வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சயனக்குறைவுகள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

**இடபம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

| சந் | சுக் | சூரி | ராகு, செவ், புத |
|---|---|---|---|
| | இராசி பலன் கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பூரம், உத்திரம் | | |
| சனி, கேது | குரு | | |

29.05.2019
வைகாசி 15, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
தசமி பிற்பகல் 2.45 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 8.52 மணிவரை
சுபநேரம் 4.22 - 5.52 மணிவரை
இராகுகாலம் 11.52 - 1.22மணிவரை
அக்னி நாள் முடிவு

வளவன்

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், முன்னேற்றம் காண பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்திதரும்.

**சிம்மம்:** சஞ்சலங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வழியில் புகழ்கூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

# மகாவலி அபிவிருத்தித்திட்டங்களை விரைவாக நிறைவு செய்ய வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை



(கொழும்பு)

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் உள்ளிட்ட மகாவலி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் விரைவில் நிறைவு செய்து அவற்றின் நன்மைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த பணிப்புரையை விடுத்தார்.

உமா ஓயா, மினிப்பே கால்வாய், வயம்ப கால்வாய், எஹல எலஹெர உள்ளிட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் தற்போதைய முன்னேற்ற நிலைமைகளை கேட்டறிந்த ஜனாதிபதி குறித்த காலத்திற்கு முன்னர் இத்திட்டங்களை நிறைவுசெய்து மக்களுக்கு துரிதமாக நன்மைகளை பெற்றுக்கொடுக்குமாறும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மேலும் மகாவலியின் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பை மேலும் அதிகரிக்கும் செயற்பாடுகள் புதிய கருத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மகாவலி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோர பாதுகாப்பு திணைக்களம், அரச மரக்கூட்டுத்தாபனம், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை, பொறியியல் மத்திய ஆலோசனை பணியகம் உள்ளிட்ட மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் துறை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டது.

மரநடுகைத் திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து வன அடர்த்தியை அதிகரிப்பதற்கு மகாவலி வலயத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், சுற்றாடல் பாதுகாப்பிற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி திட்டம் மற்றும் அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், இத்திட்டத்தின் காரணமாக காணிகளை இழந்தவர்களை மீளக் குடியமர்த்தியுள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட இம்மக்களின் பொருளாதார, சமூக பின்புலத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றியும் மீளாய்வு செய்யப்பட்டது. (7)

# விநாயகர் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைக்கும் செயலுக்கு இந்து மாமன்றம் கடும் கண்டனம்

ஆண்டுகள் பலகடந்தாலும், ஆட்சிகள் பலமாறினாலும் இந்த நாட்டில் வாழும் இந்துக்கள் மீது மத ரீதியாக ஏதோ ஒரு வகையில் அடக்கு முறைகளும் துன்புறுத்தல்களும் அதர்மமான செயல்களும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

இந்நாட்டின் அரசாங்கம் 2015ஆம் ஆண்டில் "நல்லாட்சி"என்ற வாசகத்துடன் ஆட்சிப் பொறுப்பிலமர்ந்த போது, இந்நாட்டில் நல்லிணக்கம் உருவாகி சமாதான சகவாழ்வு மலரும் என்ற பெரும் நம்பிக்கை இந்நாட்டு தமிழ் மக்களுக்கு இருந்தது. ஆனால் அரசோ, அரச நிறுவனங்களோ செயற்பட்டு வரும் முறையானது, தமிழ் மக்களின் அந்த நம்பிக்கையைக் குறைத்து இல்லாமற் செய்வது போல உள்ளது.

ஈழத் திருநாட்டின் பல பகுதிகளிலும் இந்து மத தொன்மைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அச்சான்றுகள் காலத்துக்கு முந்திய வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றையெல்லாம் மாற்றியமைத்து, அவற்றைப் பௌத்த சின்னங்களாக திரிபுபடுத்தி, வரலாற்றை மாற்றும் கைங்கரியத்தை "தொல்லியற் திணைக்களம்" முன்னெடுத்து வருகின்றது.

ஒரு அரச திணைக்களம் என்ற வகையில் அது, இந்நாட்டு மக்களுக்கு இன-மத - மொழி வேறுபாடின்றிச் செயலாற்ற வேண்டியது சட்டத்தின்படி கட்டாயமானதாகும். தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இந்து ஆலயங்கள் மற்றும் தமிழரின் புராதன வாழ்விடங்கள் தொடர்பில் பலதடவைகள் அரசிற்கு முறையிட்டும் அரசாங்கமும் பாராமுகமாக இருந்து வருகின்றது எமது மக்களை வேதனை கொள்ளச் செய்துள்ளது.

திருகோணமலை சிவன் ஆலயம், கிண்ணியா வெந்நீரூற்றுக்கள் ஆகிய கிழக்கு மாகாண இடங்களிலும், வடக்கில் மன்னார் திருக்கேதீச்சரம், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் வெடுக்குநாறிமலை எனப் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் பட்டியற்படுத்தப்பட்டு, அங்கு பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு திணைக்களம் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி வருகின்றது.

இந்த வகையில்தான், திருகோணமலை, கிண்ணியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் அமைந்துள்ள காணியும் தொல்லியல் திணைக்களத்தால் புராதன இடமாக பட்டியற்படுத்தப்பட்டு அந்தப் பிள்ளையார் கோவில் கட்டட வேலைகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்ட அதேவேளை, அருகிலுள்ள வில்கம் விகாராதிபதி தலைமையில் அந்தக் காணியில் அடாத்தாக குடியேறி விகாரை அமைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இச்செயற்பாடுகள்தொடர்பில்அகில இலங்கை இந்து மாமன்றம் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன், எமது உரிமைகளை மீட்டு எமது பாரம்பரிய சின்னங்களைப்பேணுவதற்கு மாமன்றம்சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் தயங்காது என்பதையும், தெரிவித்துக் கொள்கின்றோம் என அந்த மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இராணுவச் சீருடைகளுடன் பெருமளவு தோட்டாக்கள் மீட்பு

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 154 கடவுச்சீட்டுக்கள், 7 சொட்கன் தோட்டாக்கள், 5 சொட்கன் வெற்று தோட்டாக்கள், ஒரு துப்பாக்கி தொலைநோக்கு கருவி, 3 இராணுவ சீருடைகள், 2 வாள்கள், 20 கிலோ மக்னீசியம் சல்பைற்று, 64 தேசிய அடையாள அட்டைகள், ஒரு கம்பட் சீருடை, 4 சந்தேகத்திற்கிடமான ஆட்டோக்கள், 4 மோட்டார் சைக்கிள்கள், 4 சற்றலைட் தொலைபேசிகள், 26 கையடக்கத் தொலை பேசிகள், தோட்டாக்கள் , 17 கிலோ மாவா போதைப் பொருள் மற்றும் கத்திகள் போன்றவற்றை மீட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது சந்தேகத்திற்கிடமான 39 நபர்கள் கைது செய்யப்பட்டு அருகாமையிலிருக்கும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகள் மகியங்கனை, நாத்தான்டி, வெலிபென, பொருடோட, கொச்சிக்கடை, நாரஹேறன்பிட்டி, பெரிய முல்லை, கற்பிட்டி, மாதம்பே, மோதறை, புவக்பிடிய மற்றும் மத்தேகொட போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிப்புக்குள்ளான தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான, நிதியை வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குத்தகை தவணைக் கட்டணத்துக்கு அப்பால் இந்த நிவாரணங்களை வழங்க அமைச்சு இணங்கியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (7)

# அனுருத்த பாதெனியவுக்கு எதிரான வழக்கு 4 ஆம் திகதி

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் (GMOA) தலைவர் டாக்டர் அனுருத்த பாதெனியவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதியன்று அழைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்களான பேராசிரியர் சரத் விஜயசூரிய மற்றும் காமினி வியங்கொட ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (7)


வைகாசி மாத லொத்தர் சீட்டு வெற்றியாளர்கள்

20.05.2019 மகஜன சம்பத (ஒரு இலட்சம் ரூபா)
26.05.2019 தன்நிதானய (ஒரு இலட்சம் ரூபா)
(யாழ்.முகவர் திரு.S.கனகலிங்கம்)

தேசிய லொத்தர் சபை (N.L.B) அபிவிருத்தி லொத்தர் சபை (D.L.B) ரிக்கற்றுக்களை யாழ்.நகரம், திருநெல்வேலி, சின்னக்கடை மற்றும் கைதடியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.முகவர்கள்
திரு.S.கனகலிங்கம் (தேசிய லொத்தர் சபை)
திருமதி.K.திலகவதி (அபிவிருத்தி லொத்தர் சபை)
(8958)


# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை; அமித் வீரசிங்கவின் மறியல் நீடிப்பு

தெல்தெனிய பகுதியில் கைது செய்யப்பட்ட மஹாசோன் பலகாய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்கவிற்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தெல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மஹாசோன் பலகாய தலைவர் அமித்வீரசிங்க கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இதனை அடுத்து அமித் வீரசிங்கவை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் கடந்த 15 ஆம் திகதி உத்தரவிட்டார்.

இந்நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே அவரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம், மார்ச் மாதமளவில் திகன, தெல்தெனிய முஸ்லிம் பிரதேசங்களில் கலவரத்தை ஏற்படுத்தி, வீடுகள் மற்றும் கடைகள் உள்ளிட்ட சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் தீக்கிரையாக்கிய சம்பவங்கள் தொடர்பில் அமித்வீரசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதன் பின்னர் 7 மாதங்களின்பின்னர் அமித் வீரசிங்க உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## திரிசங்கு நிலையில் ஐ.தே.க.

# றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

# அனைத்து எம்.பிக்களுக்கும் அரசியல் களப்பரீட்சை

## மகிந்த அணி மகிந்தானந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றால் அரசாங்கம் பலவீனமடையும். நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடிப்படையாகக் கொண்டே இம்முறை மக்கள் அரசியல் ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்வார்கள். எனவே அனைத்து எம்.பிக்களுக்கும் இதுவொரு அரசியல் களப்பரீட்சையாக காணப்படும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

இஸ்லாமிய அடிப்படைவாதத்துடன் தொடர்புபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை மையப்படுத்தியே அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சியினரும், தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவதாக தமது தனிப்பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

கட்சி ரீதியில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் எவ்விதத்தில் மாற்றமடையும் என்று குறிப்பிட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி தற்போது திரிசங்கு நிலையில் அகப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. விவாதத்தின் போது எதிர்த்தரப்பினரால் சாட்டப்பட்ட 10 குற்றச்சாட்டுக்களும் தெளிவாக விபரிக்கப்படும். பிரேரணை நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் தலைமைத்துவத்தின் அரசியல் சூழ்ச்சிக்கு அகப்படாமல் மனசாட்சிக்கு மதிப்பளித்து செயற்பட்டால் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளும் தரப்பினரும், எதிர்த்தரப்பினரும் எவ்வாறு கையாளுவார்கள். எவர் ஆதரவாகவும் எதிராகவும் வாக்களிப்பார்கள் என்று பொதுமக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே எதிர்காலத்தில் மக்கள் அரசியல் ரீதியான தீர்மானங்களை முன்னெடுப்பார்கள். ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்து மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேச மக்களின் அரசியல் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அதற்கேற்பவே செயற்பட வேண்டும்.

இன்று பெரும்பாலான மக்கள் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள் என அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பௌத்தபீடத் தலைவர்களுடன் இ.தொ.காவினர் சந்திப்பு






(கண்டி)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு நேற்று கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு பௌத்த மத பீடங்களின் மகாநாயக்கர்களை சந்தித்துள்ளனர்.

இந்த நிகழ்வின் போது அஸ்கிரிய பீடத்தின் மகாநாயகர் வரக்காகொட ஞானரத்ன தலைமைத்தேரரை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, மல்வத்து விகாரைக்கு விஜயம் செய்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்பெட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தலைமைத்தேரரை சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டனர். (7)



## கடமைகளை பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக ரவி விஜயகுணவர்த்தன தனது கடமைகளை நேற்று முன் தினம் காங்கேசன்துறையிலுள்ள உத்தியோகபூர்வ அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட இவருக்கு பொலிஸ் அணிவகுப்பு வழங்கப்பட்டதுடன் மதத் தலைவர்களால் ஆசியும் வழங்கப்பட்டது. (இ-10)

## மாகாண தமிழ் கல்வி அமைச்சை நீக்குவதற்கு இடமளிக்கமாட்டோம்

### அமைச்சர் இராதாகிருஷ்ணன் உறுதி



(ஹற்றன்)

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சை அகற்றி அதனை மத்திய மாகாண முதலமைச்சருக்கு கீழ் வருகின்ற கல்வி அமைச்சுடன் இணைக்க வேண்டும் என மத்திய மாகாண கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை செய்துள்ளதை, தான் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் இந்த அமைச்சை இல்லாதொழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இத்தீர்மானங்களைக்கொள்கை ரீதியில் ஜனாதிபதியும் பாராளுமன்றமுமே மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் ஹற்றனில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக மத்திய மாகாண கணக்காய்வாளர் திணைக்களத்தின் கணக்காய்வாளர் நாயகம் பின்வருமாறு பரிந்துரை ஒன்றைச் செய்துள்ளார்.

அதன்படி மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஊடாக சிறப்பான ஒரு சேவையை முன்னெடுக்கக்கூடிய நிலை இருக்கின்ற பொழுது தமிழ் கல்விப் பிரிவை மத்திய மாகாண விவசாய அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்றமையானது பொருத்தமற்ற ஒரு செயலாக கருதுவதாகவும் இதன் காரணமாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் கீழ் (முதலமைச்சரின் கீழ்) செயற்படும் கல்வி அமைச்சுடன் செயற்படுவதே சிறந்ததாகும் எனக் கணக்காய்வாளர் நாயகத்தால் 2019 மே மாதம் 7 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை தான் முற்றாக நிராகரிப்பதாகவும் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு தனியாகவே செயற்பட வேண்டும். 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமையின் கீழ் மறைந்த அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் கல்வி அமைச்சராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என விடுத்த கோரிக்கையின் பயனாக இந்த மூன்று மாகாணங்களிலும் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், காலப்போக்கில் இது சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன் மத்திய, ஊவா மாகாணங்களில் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதை காண முடியும். இதனை மத்திய மாகாண கல்வி அமைச்சின் கீழ் இணைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் பரிந்துரையை எந்தக் காரணம் கொண்டும் நடைமுறைப்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### விகாரைக்குச் செல்லக்கூட அச்சமாகவுள்ளது

# தனது வாக்கு வங்கிக்காக ஜனநாயகத்தை மீறும் அரசு

## மகிந்த அணி குற்றச்சாட்டு

**(மாத்தறை)**

**தனது வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, ஜனநாயகத்தை மீறும் செயற்பாட்டையே அரசாங்கம் தொடர்ச்சியாக செய்து வருவதாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றம்சாட்டினார்.**

மாத்தறையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ, இந்த நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததையடுத்து அனைவரும் நிம்மதியாகவே வாழ்ந்து வந்தோம்.

இன்று விகாரைக்குச் செல்லக்கூட எமக்கு அச்சமாக இருக்கிறது. மதஸ்தலங்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. யுத்த காலத்தில் கூட, விகாரைகள் பாதுகாக்கப்பட்டன.

ஆனால் தற்போது, மக்கள் பெரும் அச்சத்துடன் காணப்படுகின்றனர். அத்தோடு, இன்று எமது சமூகத்தை அழிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

குருநாகலில் கைது செய்யப்பட்டுள்ள வைத்தியர், ஆயிரக்கணக்கான பெண்களுக்கு கருத்தடை செய்துள்ளதாக கூறியுள்ளார்.

எமது பெண்கள் எத்தனை



பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக்கூட, இன்னொருவர்தான் முடிவு செய்துள்ளார். இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

அத்தோடு, அன்று மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட காலத்தில், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, அதனை ஒரு நாளில் சபாநாயகர் விவாதத்திற்கு எடுத்தார். இதற்காக தெரிவுக்குழுவை அமைக்கவில்லை.

ஆனால், இன்று அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ள போது மட்டும், தெரிவுக்குழுவை அரசாங்கத்தினர் ஸ்தாபித்துள்ளனர்.

உண்மையில், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக எவரேனும் செயற்பட்டால், அவர்களுக்கு இனிமேல் வாக்குக் கேட்டு கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

தனது வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே, ஜனநாயகத்திற்கு விரோதமாக இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமானது, தனிப்பட்ட நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதல்ல. எமக்கும், அவருக்கும் எந்தவித தனிப்பட்ட விரோதமும் கிடையாது.

எனினும், தீவிரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு உதவிகளைச் செய்தார் என்று கருத்து நிலவி வருகிறது.

இதனாலேயே நாம் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளோம்" என யாப்பா மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் STF அதிகாரி பலி!



ஆனமடுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பங்தெனிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை 5.05 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் அந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஆனமடுவ பகுதியைச் சேர்ந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையின் களுபோவில முகாமில் கடமையாற்றிய 31 வயது நாமல் ரத்நாயக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

---

# ஷரியா பல்கலைக்கழகம் தொடர்பில் நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை

## அரச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக அறிவிக்க கோரிக்கை



(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகத்தை அரச பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக அறிவிக்குமாறு கோரி, தனிநபர் பிரேரணையொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


கடும்போக்குவாதமுடைய சிறு பிரிவிடமிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கு, மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகத்தைப் பாதுகாப்பு அமைச்சுக்கு சுவீகரித்து, அரச பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக அது அறிவிக்கப்பட வேண்டும் என திலங்க சுமதிபால தனது பிரேரணையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமையில் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு, இலங்கையில் இனிமேலும் இவ்வாறான நிலை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என திலங்க சுமதிபால மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

# சமுர்த்திப் பயனாளிகளை இணைக்கும் தேசிய நிகழ்வுக்கு ரூ.180 மில்.செலவு

## மேடைக்கு மாத்திரம் 42 இலட்சம்–ஜே.வி.பி.பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் 6 இலட்சம் சமுர்த்திப் பயனாளிகளை இணைக்கும் தேசிய நிகழ்வில் மேடைக்கு மாத்திரம் 42 இலட்சம் ரூபாவை அரசாங்கம் மதிப்பீடு செய்திருப்பதாக ஜே.வி.பி. குற்றம்சாட்டியது.

இதை விடவும் பிராந்திய ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளில் மேடைகளுக்கு மாத்திரம் 10 இலட்சம் ரூபா செலவு செய்யவுள்ளனர். இது தொடர்பான நிகழ்வுகளுக்கு மொத்தம் 180 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்படுவது வீண்விரயமானது என ஜே.வி.பியின் ஊடகச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

பலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆறு இலட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எனினும், இதனை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கே வீண் செலவு செய்யப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

சமுர்த்திப் பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு நாளை 30 ஆம் திகதி அமைச்சரின் ஊரான அம்பாறையில் நடைபெறவுள்ளது. இது தவிர வுட 12 பிராந்திய நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிக்காக 180 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரீசேர்டுக்களை தயா



ரிப்பதற்கு 7 இலட்சம் ரூபாவை செலவு செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வடிகால் அமைக்கும் பணியால் பொதுமக்களுக்கு அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியா நகரசபையினால் முதலாம் குறுக்கு தெரு வீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் வடிகால் அமைக்கும் பணியினால் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர்.

நகரசபையினால் ஒதுக்கப்பட்ட நிதியில் வவுனியா முதலாம் குறுக்கு தெரு வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வடிகால் அமைக்கும்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வடிகால் அமைப்பதற்காக வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக குழி தோண்டப்பட்டது. இன்றுடன் பத்து நாட்கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த குழியினை தாண்டி வர்த்தக நிலையங்களுக்கோ அல்லது வங்கிகளுக்கோ செல்ல முடியாத நிலையில் பொதுமக்களும் வர்த்தகர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்திலெடுத்து விரைவாக வடிகால் அமைக்கும் பணியினை பூர்த்தி செய்து தருமாறும் வாடிகால் அமைக்கும் பணி நிறைவுறும் வரை மாற்று ஏற்பாடொன்றினை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடம் குறித்து நகரசபை உப நகரபிதா சு. குமாரசாமியிடம் கேட்டபோது, கால்வாய்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓரிரு தினங்களில் வேலை முடிவடையும் எனத் தெரிவித்தார். (9-250)

## மன்னாரில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில்

# அடிப்படை வசதிகள் வழங்கப்படாததால் கிராமங்களை விட்டு வெளியேறும் மக்கள்

(கண்டாவளை)

மன்னார் மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்ற ஆத்திமோட்டை,கூராய் போன்ற விவசாயக்கிராமங்களின் தேவைகள் நிறைவு செய்யப்படாமையினால் அங்கு வாழ்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் தற்போது 150 இற்கும் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆத்திமோட்டை கூராய் சீது விநாயகர் புரம். ஆகிய கிராமங்களில் கடந்த காலங்களில் சுமார் 400 இற்கும மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

இந்நிலையில் குறித்த கிராமங்களின் வசதிக்குறைபாடுகள் காரணமாக 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களிற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

கடந்த கால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டஇப்பிரதேசத்தில் இயங்கிய ஆத்திமோட்டைப்பாடசாலை தற்போது கள்ளியடிப்பாடசாலையுடன் இணைப்புப்பாடசாலையாக இயங்கி வருகின்ற போதும் கூராய் கிராமத்தில் இருக்கின்ற பாடசாலை பல்வேறு தேவைப்பாடுகள் காணப்பட்டாலும் குறைந்தளவு மாணவர்களுடனேயே இயங்கி வருகின்றது.

முன்பு 80 வரையான குடும்பங்கள் வாழ்ந்த ஆத்திமோட்டைக்கிராமத்தில் 13 குடும்பங்களும் 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழந்து வந்த சீது விநாயகர் புரத்தில் 36 குடும்பங்களும் 200 இற்கும மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த கூராய் கிராமத்தில் 100 வரையான குடும்பங்களும் மாத்திரமே வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் இக்கிராமத்திற்கான பிரதான வீதி இன்றுவரை புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதைவிட, காட்டு யானைகளின் தொல்லை மற்றும் போக்குவரத்து வசதியின்மை, மருத்துவ வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சினைக்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

# பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரன தலைமையில் மன்னாரில் கைப்பணியாளர்களுக்கு கருத்தமர்வு





மன்னார் மாவட்டத்திலுள்ள கைப்பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்படவுள்ள கைப்பணியாளர்களுக்கு "ஜனாதிபதி விருது" வழங்குவது தொடர்பாக மன்னார் மாவட்டத்திலுள்ள கைப்பணியாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விசேட நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய அருங்கலை பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் கைத்தொழில் பிரதி அமைச்சர் புத்திக பத்திரன கலந்து கொண்டார். இதில் தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள கைப்பணியாளர்களின் கண்காட்சி மற்றும் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு "ஜனாதிபதி விருது" வழங்குவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் கைப்பணிப் போட்டி கண்காட்சிக்கான முன்னோடி விழிப்புணர்வு வழங்கப்பட்டதோடு, பதிவு செய்யப்படாத கைப்பணியாளர்களின் பதிவுகளும் இடம் பெற்றன.

குறித்த விழிப்புணர்வுக் கருத்தமர்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள கைப்பணியாளர்கள், கைத்தொழில், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள், பலர் கலந்து கொண்டதோடு, தேசிய அருங்கலை பேரவையின் உதவிப்பணிப்பாளர் கே.ஜயலத், தேசிய அருங்கலை பேரவையின் உறுப்பினர் டபிள்யூ.வி.பி.விஜயக்கோன் உட்பட தேசிய அருங்கலை பேரவையின் பிரதிநிதிகள், தேசிய தொழில் திணைக்களத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-285)

## ஊடகவியலாளரை தாக்கிய கொக்கிளாய் பொலிஸார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்டகாலமாக சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகின்ற நீராவியடிப் பிள்ளை யார் ஆலயத்தில் புதிதாக பொருத் தப்பட் டுள்ள சிசிடிவி கமராக் களை அகற்றுமாறு முல்லைத் தீவு நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டிருந்தது.

• இந்த விடயம் தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற முல்லைத்தீவு மாவட்டத் தின் சுயா தீன ஊடகவியலாளரான ஒரு வரை கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் தாக்கியுள்ளனர்.

அத்துடன் அவரை தீய வார்த்தைக ளால் எச்சரித்ததாகவும் ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். (9-281)

# தமிழர்களின் பாரம்பரியம் பறிபோவதை அனுமதிக்கமுடியாது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி-காட்டம்

(குருமன்காடு)

தமிழர்களின் பாரம்பரிய கலாசார பண்பாட்டு சின்னங்களை கையகப்படுத்துவதை சிங்களப் பேரினவாதம் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே கிண்ணியாவிலும் தமிழர் ஒருவருக்கு சொந்தமான பூர்வீக பகுதியை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாதென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழ் மன்னன் இராவணனால் கிண்ணியா வெந்நீர் ஊற்று அமைக்கப்பட்டது என்ற வரலாற்றுப் பதிவுகளின்படி அப்பகுதி தமிழர்களின் பாரம்பரியத்துடன் இரண்டறக் கலந்த மிக முக்கியமான பிரதேசமாக கொள்ளப்பட்டு வருகின்றது.

வரலாற்று சிறப்புமிக்க இப்பகுதியை திட்டமிட்டு சிங்கள பௌத்த பேரின வாதத்தின் அடையாளமாக மாற்றுவதற்கான முயற்சிகள் அரசாங்கத்தின் ஆசியுடன் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இது ஒருபோதும் நாட்டின் நல்லிணக்கத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுக்காது என்பதை ஆட்சி யாளர்களும் அதிகாரிகளும் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோரும் உணர்ந்து கொள்வது அவசியம்.

எந்தவொரு மதத்திற்கும் எந்தவொரு மதவாதிக்கும் ஏனைய மதங்களின் மீது அதிகாரம் செலுத்துவதற்கும் அந்த மதச் சின்னங்களை அழிப்பதற்கும் அதிகாராம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக, இந்த வெந்நீர் ஊற்றுக்கு அருகில் உள்ள வில்கம் விகாரையைச் சேர்ந்த தேரர்களால் இப்பகுதியை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவைகளை தடுத்து நிறுத்துவதற்கு அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கு நிரந்தர தீர்வுகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்பது கண்டனத்திற்குரியதாகும். இதுவரையில் ஆட்சியில் இருந்தவர்களும் இன்று ஆட்சியில் இருப்பவர்களும் தமிழ் மக்களின் மீது சிங்கள பேரினவாதம் தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டதே இந்த நாடு கடந்த முப்பது ஆண்டுகளாக மிகப்பெரிய அவலங் களுக்கும் சீரகேடுகளுக்கும் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அதை உளமார உணர்ந்தவர்களாக ஆட்சியா ளர்களின் நடவடிக்கைகள் தென்படவில்லை. இந்நிலை மாற்றப்படவேண்டும்.

தற்போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கோட்டையான திருகோணமலை மாவட்டத்தில் முக்கிய பகுதிகள் எல்லாம் சிங்கள பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் சென்று கொண்டிருக்கின்றன. அதில் சைவர்களின் வரலாற்று சிறப்புமிக்க கிண்ணியா பகுதியும் பறிபோகும் அபாயத்தில் இருக்கின்றது. இதேபோன்று முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி புத்தர் சிலையும் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு, இன நல்லிணக்கம் இவற்றை தற்போதைய ஆட்சியாளர்களிடத்திலிருந்தும் எதிர்பார்க்க




முடியாதுள்ளது என்பது வெளிப்படையாகிவிட்ட நிலையில், ஆகக் குறைந்தது தமிழர்களின் இருப்பினையாவது பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. அந்த வகையில் தனியாருக்குச் சொந்தமான கிண்ணியா பாரம்பரியப்பகுதியை கையகப்ப டுத்தும் நடவடிக்கைக்கு எதிராக விரைந்து செயற்பட வேண்டியுள்ளது. இல்லாது விட்டால் தமிழர்களின் வரலாறு செறிந்த திருமலை மாவட்டம் பறிபோய் தமிழர்கள் அநாதைகளாகும் நிலைமையே ஏற்படும் ஆபத்துள்ளது.

இனியும் அமைதியாக இருப்பதன் ஊடாக அரசை பாதுகாக்கும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதைச் சாதிக்க விளைகின்றார்கள் என்ற கேள்வியே இங்கு எழுகின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (9-250)

### மன்னார் முசலி பிரதேசத்தில்

# முஸ்லிம்களுக்கு புதிய வீட்டுத் திட்டம்

## தடுத்து நிறுத்திய வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர்







(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் முஸ்லிம் மக்களுக்கு புதிதாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை நேற்று வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மன்னார் முசலிப் பிரதேச செயலகப் பிரிவில் வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமான பகுதி ஒன்றில் 35 இற்கும் மேற்பட்ட வீடுகள் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெற்று வந்துள்ளன.

குறித்த பகுதியில் முஸ்லிம் மக்களுக்கான வீடுகளை அமைப்பதற்கான வேலைகள் இடம்பெற்றுள்ளது. குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பில் வனவள திணைக்களத்தினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு நேற்று சென்ற திணைக்களத்தினர் உடனடியாக வீட்டுத் திட்டப் பணிகளை நிறுத்த வேண்டும் என அறிவித்துள்ளனர். இது குறித்து மன்னார் அரச அதிபரிடம் கேட்ட போது, இந்த விடயம் தொடர்பில் தனக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்றும் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பதிலளிப்பதாக தெரிவித்தார். (9-286)



கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் கண் சத்திரசிகிச்சை பிரிவுக்கு ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான தளபாடங்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளன.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் லண்டனில் உள்ள காரை நலன்புரிச் சங்கத்தின் நிதிப் பங்களிப்பில் குறித்த தளபாடங்கள் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி மற்றும் உறுப்பினர்கள் இணைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மைதிலியிடம் தளபாடங்களைக் கையளித்தனர்.

### வவுனியாவில்

# பின்தங்கிய கிராமங்களிலுள்ள பாடசாலைகள் வனங்களால் மறைந்து போகும் அபாயம்

(கண்டாவளை)

வவுனியா மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களாகக் காணப்படுகின்ற கோழியகுளம் மற்றும் வாருடையார் இலுப்பைக்குளம், ஆகிய கிராமங்களில் உள்ள பாடசாலைகள் செயலிழந்து பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்ற குஞ்சுக்குளம், நவ்வி, பாலமோட்டை ஆகிய பிரதேசங்களை அண்டிய சிறிய விவசாயக்கிராமங்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்தப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறிய நிலையில் கோழியகுளம் பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்து காணப்பட்ட கோழியகுளம் அ.த.க.பாடசாலை புனர்நிர்மாணம் செய்து திறந்து வைக்கப்பட்டபோதும் குறித்த பாடசாலை குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பாடசாலை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றது.

அதேபோல், இதற்கு அடுத்துள்ள கிராமமான வாரியுடையார் இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பாடசாலையும் செயலிழந்து இன்று பற்றைக்காடுகள் மண்டிக் காணப்படுவதுடன், ஓரிரு வருடங்களில் இப்பாடசாலைகள் முழுமையாகவே வனங்களால் மறைந்து போகும் என பல்வேறு தரப்புக்களும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இக்கிராமங்களில் உள்ள மாணவர்கள் குறித்த பாடசாலைகள் மூடப்பட்டமையால் இங்கிருந்து நீண்ட தூரங்களுக்குச்சென்று கல்வி கற்கின்ற நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர். (9-315)

# சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்களை வைத்திருந்தவர் கைது

(மன்னார்)

தலைமன்னார் பியரில் மீன் வாடியில் டயனமற் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்களை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மீன் வாடி உரிமையாளரை கைது செய்த கடற்படையினர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

சந்தேக நபர் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னார் கடற்படையினர் தலைமன்னார் பியரிலுள்ள ஒரு மீன் வாடியைச் சோதனையிட்ட போது அங்கு ஐஸ் பதனிடுவதற்காக வைக்கப்பட்டிருந்த 273 கிலோ மணலை மீன்கள் டயனமற் மூலம் பிடிக்கப்பட்ட மீன்கள் என சந்தேகத்தில் அதை கைப்பற்றிய கடற்படையினர் வாடி உரிமையாளரையும் கைது செய்தனர்.

நீதிமன்ற கட்டளைக்கு அமைய கைப்பற்றப்பட்ட மாதிரி மீன்கள் பரிசோதனைக்காக நாராவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய மீன்கள் பேசாலை கடற்றொழில் விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட் சரீரப் பிணையில் விடுவித்த நீதவான் இவ் வழக்கை பிறிதொரு திகதிக்கு ஒத்தி வைத்தார். (9-285)

# வவுனியாவில் தங்கியுள்ள வெளிநாட்டு அகதிகளுக்கு முல்லையிலிருந்து நிவாரணம் வழங்கச் சென்றவர்களை திருப்பி அனுப்பிய இராணுவத்தினர்



(வவுனியா)

வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அகதிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கச் சென்ற முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தினரால் நேற்று திருப்பி அனுப்பப்பட்டனர்.

நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலையடுத்து நீர்கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட்டு வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு அகதிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்காக ஒரு பகுதியினர் பூந்தோட்டம் முகாம் பகுதிக்கு நேற்று சென்றிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள முறிப்பு கிராமத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றைச் சேர்ந்த 11 பேர் அடங்கிய குழுவினரே இவ்வாறு சென்றிருந்தனர்.

வவுனியா நகரில் இருந்து மூன்று ஆட்டோவில் நிவாரணப் பொருட்களுடன் அவர்கள் சென்ற நிலையில் வெளிநாட்டு அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம் பகுதியில் மேலதிக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், வருகை தந்தவர்களின் விபரங்களைப் பெற்றுக் கொண்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் அவ்வாறு நிவாரணப் பொருட்களை வழங்க முடியாது எனத் தெரிவித்து அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தனர்.

இதன்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர்தானிகராலயத்தின் அனுமதி பெற்று அவர்கள் ஊடாகப் பொருட்களை வழங்குமாறும் இப்பகுதிக்குள் எவரையும் உட்பிரவேசிக்க விட முடியாது என இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு, முறிப்பு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில், உறவினர்கள் அற்ற நிலையில் ஏதிலிகளாக தஞ்சம் கோரியுள்ளவர்களுக்கு உலர் உணவு வழங்கி அவர்களை பார்வையிடுவதற்காக 92 கிலோமீற்றர் தூரத்தில் இருந்து வந்தோம். இராணுவமும் பொலிஸாரும் எம்மை அவர்களைச் சந்திக்க விடாது திருப்பி அனுப்பிவிட்டனர்.

அகதிகளைப் பார்வையிடுவதும் அவர்களுக்கு உதவுவதும் மனித உரிமை ஆகும். ஆனால் அதற்கு இடமளிக்கப்படவில்லை. எனவே அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் 35 வெளிநாட்டு அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# றிசாத்துக்கு எதிராக வவுனியாவில் சுவரொட்டிகள்



(வவுனியா)

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக வவுனியாவில் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.


பாதவாதி, தேசத் துரோகியாகிய றிசாத் பதியுதீனை உடனடியாக நாடாளுமன்றத்திலிருந்து நீக்கவும் என்ற வாசகங்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எழுதப்பட்டு வவுனியா மணிக் கூட்டு கோபுரம் தேக்கவத்தை, மூன்றுமுறிப்பு பகுதிகளில் ஒட் டப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் றிசாத்துடன் நெருக்கமானவர்களுக்கு தொடர்புள்ளதாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் றிசாத்தை பதவியிலிருந்து நீக்கவேண்டுமென தெரிவித்து வவுனியாவில் பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# பாரதம்

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகளின் விடுதலை குறித்து தீர்மானிக்க சட்ட ஆலோசனையை நாடியிருக்கும் தமிழக ஆளுநர் பன்வாரிலால்









(சென்னை)

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுட்கால சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேரை யும் முன்கூட்டியே விடுதலை செய்வதா, இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தமிழ்நாடு மாநிலத் திற்கு வெளியிலுள்ள சட்ட நிபு ணர்களிடம் அபிப்பிராயம் கேட்டி ருப்பதாகவும் அவர்களது அபிப் பிராயம் கிடைக்கப் பெற்றதும் அவர் தீர்மானமொன்றை எடுப் பது சாத்தியம் என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஏழு கைதிகளையும் விடு தலை செய்யுமாறு தமிழ்நாடு அரசாங்கம் முன்வைத்த யோச னைக்கு எதிராக ஆறு பேர் தாக் கல் செய்த வழக்கொன்றை இந் திய உச்ச நீதிமன்றம் இரு வார ங்களுக்கு முன்னர் தள்ளுபடி செய்த போதிலும் கூட இந்த விவ காரத்தில் சிக்கலான பல பிரச்சி னைகள் இருப்பதன் காரணமாக ஆளுநருக்கு சட்ட ஆலோசனை தேவைப்படுகின்றது என்று கூறப் படுகின்றது.

கடந்த வருடம் செப்டெம்பர் 9 ஆம் திகதி தமிழ்நாடு அரசா ங்கத்தின் அமைச்சரவை அதன் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தில் சிறிகரன் என்ற முருகன், சுதேந் திரராஜா என்ற சாந்தன், ரொபர்ட் பாயஸ், எஸ்.ஜயகு மாரன் என்ற ஜயகுமாரன், ஏ. ஜி. பேரறிவாளன் என்ற அறிவு, ரவிச்சந்திரன் என்ற ரவி மற்றும் நளினி சிறிகரன் ஆகிய ஏழு குற்றவாளிகளையும் முன்கூட் டியே விடுதலை செய்வதற்கு சிபார்சு செய்திருந்தது.


இந்திய பொதுத்தேர்தல் நடை பெறவிருந்த நிலையில் தேர்தல் ஆணையகத்தினால் நடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டு அவை நடைமுறைக்கு வரும் வரையில் இந்த கைதிகளின் விடுதலை தொடர்பில் மாநில அரசாங்கம் இரண்டு நினைவூட்டல் கடி தங்களை ஆளுநருக்கு அனுப்பி வைத்திருந்தது. கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல மைச்சர் எடப்பாடி கே.பழினி சாமி சேலத்தில் செய்தியா ளர்களுடன் கூறுகையில்.

ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளிகளை விடுவிப்பதில் தனது அரசாங்கம் உறுதிப்பாட்டு டன் இருக்கின்றது என்று கூறி யிருந்தார்.

இந்த அரசியலமைப்பின் 161 ஆவது பிரிவின் கீழ் (குறிப்பிட்ட சில வழக்குகளில் மன்னிப்பு வழங்குவதில், தண்டனை களை இடை நிறுத்துவதற்கு, தண்டனைகளை குறைப்புச்செய் வதற்கு ஆளுநருக்கு உள்ள அதிகாரங்கள்) ஆளுநர் சகல சூழ்நிலைகளின் கீழும் தமது அமைச்சரவையில் ஆலோச னைகளின் பிரகாரம் செயற்பட வேண்டியவராக இருக்கின்றாரா? அல்லது மத்திய அரசினால் நியமிக்கப்படுகின்றவர் என்ற வகையில் மத்திய அரசாங் கத்தின் நிலைப்பாட்டை ஏற்று செயற்படுபவராக இருக்கின் றாரா? என்பதே இதில் உள்ள சர்ச்சையாகும். விடுதலையாகும் பட்சத்தில் இந்த ஏழு பேரில் இலங்கை பிரஜைகளான நால் வரின் ( சிறிகரன், சாந்தன், ரொபட் பாயஸ், எஸ். ஜயகுமார்) எதிர்காலம் குறித்த பிரச்சினை யும் தீர்வு காணப்பட வேண்டிய தொன்றாக இருக்கின்றது.

இந்த கைதிகளை விடுதலை செய்வதற்கான எந்தவொரு முயற்சியையும் தாம் எடுப்பதாக மத்திய அரசாங்கம் தெளிவாகக் கூறியிருக்கின்றது. அத்தகைய நிலையில் மத்திய அரசின் நிலைப்பாட்டை பொருட்படுத்தா மல் ஆளுநரினால் சுயாதீன மான தீர்மானமொன்றை எடுக்க முடியுமா? என்ற கேள்வி எழு கின்றது. சுமார் ஆறு மாத காலத்திற்கு முன்னர் கூட மத்திய அரசு இந்த கைதிகள் விவகாரத்தில் தன்னுடன் ஆலோசனை கலக்கப்பட வேண்டும் என்று ஆளுநருக்கு தெரியப்படுத்தியிருந்தது. கைதி கள் விடுதலை செய்யும் பட்சத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கு மான உறவுகளில் அது ஏற்படுத் தக் கூடிய தாக்கம் பரிசீலனை க்கு எடுக்கப்பட வேண்டிய பிறி தொரு காரணியாகும். இந்த காரணத்திற்காகவும் கூட மத் திய அரசுடனான கலந்தாலோ சனை அத்தியாவசியமாகின்றது.

இலங்கை பிரஜைகளான நான்கு கைதிகளுக்கும் என்ன நடக்கும் என்பது அடுத்த முக்கி



யமான பிரச்சினையாகும். அவர் களை திருப்பி எடுத்துக் கொள்ள இலங்கை அரசாங்கம் விரும் புமா? என்பது தொடர்பில் இது வரையில் எந்தத் தகவலும் இல்லை. செல்லுபடியாகக்கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லாமலே அவர்கள் நால்வரும் இந்தியா விற்குள் பிரவேசித்திருந்தனர். அவர்களில் இருவர் (ரொபர்ட் பாயஸ், ஜயகுமார்) 1990 செப் டெம்பரில் அகதிகளாக தங் களை பதிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஐந்து வருடங்க ளுக்கும் கூடுதலான இலங்கை யர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதை இந்திய அதிகாரிகள் நிறுத்தி விட்டனர். விடுதலை யாகும் பட்சத்தில் நால்வரும் இந்தியாவிலே தொடர்ந்து இரு க்க விரும்புவார்களானால் அவர் களுக்காக மத்திய அரசாங்கம் விதிவிலக்கான நடைமுறை யொன்றை கடைப்பிடிக்க வேண் டியிருக்கும்.

நால்வரும் இந்தியாவில் தொடர்ந்து இருக்கவோ, அல்லது இலங்கைக்கு திரும்பிச்செல்ல விரும்பாவிட்டால் மாற்று நட வடிக்கையாக மூன்றாவது நாட் டில் குடியமர்த்தலுக்கான சாத்தி யம் குறித்து ஆராய இருக்கும். நால்வரினதும் எதிர்காலம் தொட ர்பில் திருப்திகரமான தகவல் இல்லாதபட்சத்தில் அவர்களின் விவகாரத்தையும் ஏனைய மூன்று கைதிகளின் விவகா ரத்தையும் தனித்தனியாக ஆளுநர் கையாள முடியுமா? என்பது இன்னுமொரு பிரச்சி னையாகும். ஆனால் ஏழு பேரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே மாநில அமைச் சரவையின் சிபாரிசாகும். சட்ட ரீதியாக உள்ள நிலைப்பாட்டின் கீழ் கைதிகளை வேறுபடுத்தி எந்தவொரு தீர்மானத்தையும் ஆளுநர் எடுப்பதற்கான வாய்ப் பெல்லை கிடையாது என்று த இந்து பத்திரிகையின் செய்தியொ ன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## பிரேசிலிலுள்ள 4 சிறைகளி

## 40 கைதிகள் பரிதாபமாக

(ரியோடிஜெனீரோ)

பிரேசில் நாட்டில் 4 சிறை களில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியதில் 40 கைதிகள் பலி யாகினார்கள்.

பிரேசில் நாட்டில் அமேசோ னாஸ் மாகாணத்தில் போதை பொருள் கடத்தல் கும்பல் ஆதிக் கம் உள்ளது. இதனால் அங்கு குற்ற சம்பவங்கள் அதிக அள வில் நடைபெறுவதால் அங்கு ள்ள சிறைகளில் கைதிகள் கூட் டம் நிரம்பி வழிகிறது.

இந்த நிலையில் நேற்று அமே சோனாஸ் மாகாணத்தின் தலை நகர் மனாயஸ்சில் உள்ள 4 சிறைகளில் கைதிகள் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. இந்த சிறைகள் அனைத்தும் அடுத் தடுத்து அமைந்துள்ளன.

அதில் ஒரு சிறையில் மட்டும் 15 பேர் உயிரிழந்தனர்.



ஏனைய சிறைகளில் 25 பேர் பலியாகினர். ஆக மொத்தம் 40 கைதி கள் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்கு துப்பாக்கிகள் அல்லது கத்திகளை பயன்படுத்தவில்லை. சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே

## போகோஹராம் தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினர் உட்பட



(நைரோபி)

நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தொடர் தாக்குதலில் பாதுகாப்பு படை யினர் 16 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் தடை செய்யப்பட்ட

## ஜப்பானில் மர்ம நபர் கத்

## பெண்குழந்தை உட்பட 2

### 17 பேர் படு

(டோக்கியோ)

ஜப்பானின் கவாசாகி பகு தியில் உள்ள பூங்காவில் மர்ம நபர் திடீரென கத்திக்குத்து தாக் குதல் நடத்தியதில் பெண் குழ ந்தை உட்பட 2 பேர் பலியா கினர்.

ஜப்பான் நாட்டின் கவாசாகி நகரின் நோபோரிடோ பகுதியில் பூங்கா ஒன்று அமைந்துள்ளது. அந்தப் பூங்காவில் நேற்று முன்தி னம் குழந்தைகள், பெரியவர்கள் என பல்வேறு தரப்பினர் கூடியி ருந்தனர்.

இந்நிலையில், அந்த பூங்காவுக் குள் நுழைந்த மர்ம நபர் திடீரென அங்கிருந்தவர்களை கத்தியால் சர மாரியாக குத்தினார்.

இந்த தாக்குதலில் பெண் குழந்தை உட்பட 2 பேர் பலியானதாகவும், மேலும் 17 பேர் காயம் அடைந்துள் ளதாகவும் முதல் கட்ட தகவல் வெளி

# ளில் கலவரம்;
# ாக உயிரிழப்பு



ஏற்பட்ட மோதல் பின்னர் கலவரமாக மாறியது என அதிகாரிகள் தெரிவித் தனர். உலகிலேயே அதிக கைதிகள் நிறைந்த சிறையாக பிரேசில் திகழ் கிறது. இங்கு மொத்தம் 3 இலட்சத்து 68 ஆயிரத்து 49 கைதிகள் அடைக்கப் பட்டுள்ளனர். (7)

# கள் தாண்டவம்;
# ட்பட 16 பேர் பலி

போகோஹராம் தீவிரவாதிகள். அரச படைகள் மீதும் பொதுமக்கள் மீதும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரு கின்றனர்.

பெரும்பாலும் பதற்றம் நிறைந்த வடகிழக்கு மாநிலமான போர்னோவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை போகோஹராம் தீவிரவாதிகள் தாக் குதல் நடத்தியிருந்தனர்.

மைதுகுரியின் (Maiduguri) புறநகர்ப்பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களினுள் நுழைந்து சரமா ரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதில், உள்ளூர் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த 5 பேர், பொது மக்களில் 11 பேர் உள்ளடங்கலாக 16 பேர் உயிரிழந்தனர். (7)

# கத்திக்குத்து
# ட 2 பேர் பலி
## ர் படுகாயம்

யாகியுள்ளது.

தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் காயமடைந்தவர் களை மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின் றனர்.

கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபரை பொலிஸார் மடக்கிப் பிடித்து விசாரித்து வருகின்றனர். (7)

# வெளிநாடு

# கொங்கோவில் படகு விபத்து!
# 45 பேர் பலி; 200 பேர் மாயம்

(ஹின்சஷா)

**மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டில் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.**



மேலும், 200 இற்கும் மேற் பட்டோர் ஏரியில் மாயமாகி யுள்ளதாகவும் இவர்களைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டின் மேற்கு பகுதியிலுள்ள மாய் நேட ம்போ மாகாணத்தின் தலைநகர் இனான்கோவில் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்று ள்ளது.

இதில் 45 பேர் உயிரிழந் துள்ளதுடன், 200 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரு வதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. உயிரிழந்த வர்களில் 12 பெண்கள், 11 குழ ந்தைகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது, குறித்த படகில் 300 இற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ள தாகவும் எனினும், 180 பேரு க்கு மட்டுமே அதில் அமர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதிகள விலான பயணிகளை ஏற்றிச் சென்றமையே குறித்த விபத்து க்குக் காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது. (7)

# குயின்ஸ்லாந்தில் கோர விபத்து;
# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலி

குயின்ஸ்லாந்தில் இடம் பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்துள்ளனர்.

கார் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதிக்கொண்டதனா லேயே Bunya நெடுஞ்சாலை யில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.



இந்த விபத்தில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த 35 வயதான தாயும், அவரது நான்கு பிள் ளைகளுமே உயிரிழந்துள்ள னர்

விபத்தில் காயமடைந்தவர் கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளனர். (7)

# ஈரானில் ஆட்சி மாற்றத்தை
# அமெரிக்கா விரும்பவில்லை



## ஜப்பானில் ட்ரம்ப் தெரிவிப்பு

(டோக்கியோ)

ஈரான் நாட்டின் அணு ஆயுத திட்டங்களை மட்டுமே நாங்கள் எதிர்க்கிறோம். அங்கு ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள் ளார்.

ஜப்பான் நாட்டுக்கு நான்கு நாள் அரசுமுறை பயணமாக சென்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஜப்பான் மன்னர் நாருஹிட்டோவை சந்தித்த முதல் வெளிநாட்டு பிரமுகர் என்ற சிறப்பை பெற்று ள்ளார்.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே-வுடன் இருநாடுகளுக்கு இடை யிலான வரிவிதிப்பு பனிப்போர் மற்றும் வடகொரியா பிரச்சினை தொடர்பாக ட்ரம்ப் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

ஈரானை அச்சுறுத்தும் வகையில் விமானம் தாங்கி போர்க்கப்பல் மற்றும் கூடுதலாக 1500 துருப்பு இராணுவ வீரர் களை அமெரிக்காவில் இருந்து மத்திய கிழக்கு கடல் பகுதிக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ள ட்ரம்ப், "ஈரான் நாட்டின் அணு ஆயுத திட்டங்களை மட்டுமே நாங்கள் எதிர்க்கிறோம்.

அங்கு ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை" என தெரிவித் தார்.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே-வுடன் செய்தியாளர்க ளுக்கு கூட்டாக பேட்டியளித்த டொனால்ட் ட்ரம்ப், 'அமெரிக்கா வுடன் பேச்சுவார்த்தை நடத்த ஈரான் அரசு விரும்பினால் நாங் களும் தயார்.

ஈரான் நாட்டு தலைமை யிடம் ஷின்சோ அபே மிகவும் நெருக்கமாக இருக்கிறார் என்பது எனக்கு தெரியும்.

ஈரானுக்கு மோசமான நிலைமை ஏற்பட யாரும் விரும்ப வில்லை. குறிப்பாக, நான் ஈரானை காயப்படுத்த விரும்ப வில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று மேலும் தெரிவித்தார். (7)


# முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை

# மோடியைப் பின்பற்றும் ஐ.தே.க

## வாசுதேவ எம்.பி. சாடல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தேர்தலில் வெற்றிபெற கையாண்ட யுக்தியையே ஐக்கிய தேசியக் கட்சியும் மேற்கொள்ள முயற்சிக்கின்றது. அதன் பின்னணியே முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளாகும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார சாடினார்.





சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் தெரிவானார்.

இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பொது மக்களைப் பிளவுபடுத்தியே இந்தத் தேர்தல் வெற்றியை அவர் பெற்றார்.

அதாவது இந்தியாவில் இந்து. முஸ்லிம் மக்கள் பாரியளவில் இருந்து வருகின்றனர். இந்த மக்களைப் பிளவுபடுத்தியே மோடி தேர்தலில் வென்றார்.

இந்து, முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு செயற்பட்டிருந்தால் மோடி வெற்றிபெற்றிருக்க மாட்டார்.

அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி அமெரிக்காவுக்குச் சார்பான கொள்கையுடையவர். அவருடைய பொருளாதார கொள்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் உயர் நிலையில் இருப்பவர்களுடனே மேற்கொள்ளப்படுகின்றன.

அமெரிக்காவுடனே அவருடைய நட்புறவு இருந்துவருகின்றது. அதனால் மோடி ஒரு அமெரிக்க ஆதரவாளர். அதனால் அவரின் தேர்தல் வெற்றி புதுமையாகவே இருக்கின்றது.

ஏனெனில் அந்த நாட்டில் நீண்டகாலமாக பொது மக்கள் பக்கம் இருந்துவந்த பலவீனம் மற்றும் தொழிலற்றவர்களின் வீத அதிகரிப்பு. இவ்வாறான நிலையில் மோடியின் வெற்றி பாரிய வியாபாரிகளின் பணம் மற்றும்இந்து, முஸ்லிம்பிளவு ஆகிய இரண்டிலுமே இடம்பெற்றது.

அத்துடன் இந்து, முஸ்லிம் பிளவை ஏற்படுத்தியே மோடி தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்கின்றார். இது அரசியலமைப்புக்கு முரண். அதனால் இதனை நிறுத்தவேண்டும் என அந்நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் அதனை தேர்தல்கள் ஆணைக்குழு செய்யவில்லை.

இதுதான் நாங்கள் கற்றுக்கொள்ள இருக்கும் பாடமாகும். அத்துடன் இனங்களுக்கிடையில் பிளவைத் தூண்டினால் அதன் மூலம் ஏற்படுவது ஏகாதிபத்திய வாதமாகும்.

அதனால் இலங்கையில் இருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இலங்கையர்கள் என்ற வகையில் தேசியவாதத்தை அடிப்படையாகக்கொண்டு ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட முடியும். அவ்வாறான ஒன்றுதிரட்டல் மூலமாகவே இலங்கை தேசத்தவர்கள் உருவாகுவார்கள். ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரம் காரணமாக இலங்கையில் தேசியவாதம் ஏற்படாது.

அதனால் இந்தியப் பிரதமர் செயற்பட்டதுபோல் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள, முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தி அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்படவே முயற்சிக்கின்றது.

அதனால் இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இதற்கு எதிராக பொதுஜன பெரமுன மக்களைத் தேர்தல் ஒன்றுக்காக அணிதிரட்டவேண்டும். ஆனால் அதனைமேற்கொள்ள பொதுஜன பெரமுனவுக்கு இன்னும் முடியாமல்போயுள்ளது என அவர் கவலை வெளியிட்டார். (இ-7)

### சீனாவின் திட்டங்களுக்கு பாதுகாப்பு

# இலங்கைப் படையினருக்கு பீஜிங்கில் சிறப்புப் பயிற்சி

(பீஜிங்)

சீனாவுடன் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு அமைய, இலங்கை இராணுவ மற்றும் பொலிஸாரைக் கொண்ட முதலாவது அணி பயிற்சிக்காக அடுத்த வாரம் பீஜிங் செல்லவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய சீனப் பயணத்தின் போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் நடத்திய பேச்சுக்களையடுத்து, மே 14ஆம் திகதி இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.

சீனத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் இடங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் உள்ளிட்ட விடயங்களை கொண்டதாக இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சீனத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில்,

“இலங்கைப் படையினரின் மற்றும் பொலிஸாரின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் உதவிகளையும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கருவிகளையும் சீனா வழங்கும்.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் முதல் தொகுதியினருக்கான பயிற்சித் திட்டம் அடுத்தவாரம் ஆரம்பமாகும்.

நாங்கள் எமது இராணுவத்தினரை இங்கு அழைக்கப் போவதில்லை. அதற்குப் பதிலாக, இலங்கை படையினரின் ஆற்றலைக் கட்டியெழுப்பவுள்ளோம்.

எமது பாதுகாப்பை அவர்கள் மேற்கொள்வார்கள் என்று நம்புகின்றோம். எனவே, எமது படையினரை இங்கு அழைக்க வேண்டிய தேவையில்லை. இது எமது கொள்கையில்லை. இதற்கு மேலதிகமாகவும் எம்மிடம் பயிற்சி வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கலவைக் கருவி

எனக்குத் தெரிந்த ஒருவர் வந்தார். வந்ததும் வராததுமாக அவரின் மனைவியை பற்றி குறை சொல்ல ஆரம்பித்தார். அதையும் நேரடியாக குறிப்பிட்டு சொல்லுவதற்கு பயம் போல் இருக்கின்றது. பொதுவாக இப்படி ஆரம்பித்தார்.

இந்த காலத்தில் பெண்கள் வீட்டு வேலைகளை சரியாக செய்வதில்லை என்றார். பின்ன என்ன சேர் இப்ப தான் எல்லாத்திற்கும் மிஷின் வந்து விட்டதே! மிஷின்கள் வந்ததாலே இவர்களுக்கு வேலைகள் குறைந்து போய் விட்டது சேர் என்றார்.

அதற்காக சந்தோஷப்படுங்க சேர் ஆத்திரப்படாதீங்க என்றேன். உங்களுக்கு என்ன சேர் நீங்க சொல்லிட்டு போயிடுவீங்க... அவஸ்தைப்படுவது யாரு? என்றார்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது அவரின் மனைவி தூரத்தில் வந்து கொண்டிருந்தது தெரிந்தது. உடனே மெதுவாக எழுந்து சேர் என் மனைவி வருகின்றது போல் தெரிகின்றது. நான் இப்படியே போய்விடுகின்றேன் என்றார். வந்தா என்ன சேர் உட்காருங்கள் என்றார். உங்களுக்கு விபரம் தெரியாது. நான் பிறகு வந்து உங்களை பார்க்கின்றேன் எனக் கூறி கொல்லைப் பக்கமாக ஓடிப்போனார். கொஞ்ச நேரத்தில் அந்த அம்மா வந்தார். என்னுடைய வீட்டுக்காரர் இங்கே வந்தாரா? என்று விசாரித்தார்.

வந்து போய் விட்டார். என்னம்மா விடயம்? என்று கேட்டார். வீட்டிலே மிக்சி ரிப்பேர். அதை எடுத்துக் கொண்டு போய் கடையில் கொடுத்து சரி செய்ய வேண்டும் என்று ஒரு மாதமாக சொல்லிக் கொண்டு இருக்கின்றேன். இவர் காதிலே வாங்குவதில்லை என்று ஆரம்பித்தார். இந்தக் காலத்துப் பெண்கள் வீட்டு வேலைகளை சரியாக கவனிப்பதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாரே... இவங்க எவ்வளவு பொறுப்பாக மிக்சியை சரி செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். பொறுப்பில்லாமல் கத்திக் கொண்டு இருக்கின்றார் என்று புரிந்து கொண்டேன்.

சரிம்மா! அவர் மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால் சொல்லுகின்றேன். கவலைப்படாதீர்கள்! மிக்சியை எப்படி பக்குவமாக பயன்படுத்த வேண்டும் என்பதையும் கொஞ்சம் தெரிந்து கொண்டால் நல்லது என்றேன்.

ஏங்க... இன்றைக்கு சொல்லுவதற்கு வேற ஏதும் தகவல் கிடைக்கவில்லையா? என்றார். அதை நான் காதில் வாங்காதது போல் விபரத்தை சொல்ல ஆரம்பித்தேன். மிக்சி உபயோகத்தில் இல்லாத போது மின் இணைப்பில் அது இருக்கக்கூடாது. பிளக்கை எடுத்து விட வேண்டும்.

மிக்சியை கழுவுகின்ற போதும் அப்படித்தான். இது மிகவும் முக்கியம். கழுவிக்கொண்டிருக்கின்ற போது கை தவறுதலாக ஸ்விச்சிலே பட்டு சுத்த ஆரம்பித்தது என்றால் என்ன ஆவது?

அரைக்கின்ற பிளேடு மிகவும் கூராக இருக்கும். அதனால் அதை எல்லாம் கையால் தேய்த்து சுத்தப்படுத்தக் கூடாது. தண்ணீர் குழாயை திறந்து விட்டு சுத்தப்படுத்த வேண்டும். சின்னப் பிள்ளைகளை மிக்சிக்கு அருகில் போக விடாதீர்கள். அது எல்லாம் சும்மா இருக்காது. ஏதையாவது தட்டி விடும்.

இன்னொரு விடயம். மிக்சி ஓடிக் கொண்டிருக்கின்ற போது ரீவியை ஒன் செய்யாமல் இருப்பது நல்லது. மிக்சியை போதுமான உயரத்தில் வைக்க வேண்டும். அதை பயன்படுத்துகின்ற போது அதன் எல்லாப் பாகங்களும் கண்ணிற்கு தெரிகின்றது போல் இருக்க வேண்டும். மிகவும் பத்திரமான இடத்தில் வைத்திருக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டு கட்டிலுக்கு, மேசைக்கு அடியில் அதை வைக்காதீர்கள். பின் படுத்துக் கொண்டு தான் அதை ஆபரேட் செய்ய வேண்டியிருக்கும். சூரிய ஒளி நேரடியாக மிக்சியில் பட வேண்டாம்.

மிக்சியின் மேல் மூடியை மூடாமல் எப்பவும் அதை ஓட விடாதீர்கள். அதேபோல் எந்த பொருளையும் உள்ளே போடாமல் சும்மா சுத்த விட்டு வேடிக்கை பார்க்காதீர்கள். அளவுக்கு மீறி அதில் பொருட்களை திணித்து அதை ஓட விடுவதும் தப்பு.

தண்ணீர் சேர்க்காத பொருட்களை அரைக்கின்ற போது உராய்வு ஏற்படுவதனால் ஜாடி கொஞ்சம் சூடாகும். அது இயற்கை தான். சூடாகி விட்டதே மோட்டருக்கு ஏதாவது ஆகி விட்டதோ என்று நினைக்காதீர்கள். பின் எல்லோரும் செய்கின்ற ஒரு முக்கியமான ஒரு தப்பு. அதை நீங்களும் செய்யாதீர்கள்.

அதாவது மிக்சியை ஒரு பிளாஸ்ரிக் ஷீட் இல்லை என்றால் துணி மேல் வைக்காதீர்கள். ஏன் என்றால் மிக்சி ஓடிக் கொண்டிருக்கின்ற போது அந்த துணியை இழுத்தாலும் இழுத்து விடும். அப்படி இழுத்துக் கொண்டால் அடியிலுள்ள காற்றோட்டத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்ற துவாரங்களை அது போய் அடைத்துவிடும்.

இது போன்ற சில விடயங்களிலே கொஞ்சம் கவனமாக இருந்து கொண்டால் மிக்சி அடிக்கடி தொந்தரவு கொடுக்காது என்ற தகவலை சொல்லி முடித்தேன். அந்த அம்மா ஒரு மாதிரியாக பார்த்துக்கொண்டே உட்கார்ந்தார்.

என்னம்மா நான் சொன்னதை எல்லாம் காதிலே வாங்கிக் கொண்டீர்களா? என்று கேட்டேன். நான் வாங்கிக் கொண்டேன். இருந்தாலும் வீட்டிலே தினசரி மிக்சியை பயன்படுத்துபவர்களை வரச் சொல்லுகின்றேன். அவங்க தெரிந்து கொள்ளுவது தான் மிகவும் முக்கியம் என்றாள்.

ஓ... உங்கள் வீட்டில் சமையல் செய்வது வேலைக்காரியா? வரச் சொல்லுங்கள். விபரம் சொல்லி அனுப்புகின்றேன் என்றேன். அதற்கு அந்த அம்மா நான் வரச் சொன்னது வேலைக்காரியை இல்லை வீட்டுக்காரரை என்றார். அந்த ஆள் ஏன் இப்படி அவசரமாக கொல்லைப் பக்கமாக விழுந்தடிச்சு ஓடினான் என்பது எனக்கு அப்பதான் புரிந்தது.

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள், வெண்படை, முகவரட்சிக்கும் முகஅழகிற்கும் மூலிகைப்பாவனை

முகமே உடல் நலத்தைக் காட்டும் கண்ணாடி ஆகும். குழந்தைகளாக இருக்கும் போது முகமும் குளிர்நில வாகவே காட்சிதரும். வளர வளர முகத்தின் தன்மை மாறிவிடும். இதற்குக் காரணம் குழந்தையாக இருந்த போது பாலும் சோறும் உண்டு வந்தவரின் உணவிலும் மனதிலும் ஏற்பட்ட மாற்றம் ஆகும்.

எனவே முக அழகிற்கு சில சிக்கல்கள் உருவாகிறது. பருவ வயது வரும் போது பருத்தொல்லை, இரசாயன முகப்பூச்சு, பவுடர், சோப்புகளால் தோல் வரட்சி மற்றும் அகக்கோளாறின் வெளிப்பாடாக வெண்புள்ளி, கரும்புள்ளி, மரு ஏற்பட்டு முகத்தை அவலட்சணம் ஆக்கிவிடுகின்றன. இத்தகைய பிரச்சினைக்கு தீர்வு இயற்கை மூலிகைகளில் உண்டு. உதாரணமாக முகப்பருக்கள் (Acne Vulgaris) என்று அழைக்கப்படும். இது ஆண், பெண் இருபாலாருக்கும் வருவதுண்டு. முகத்தில் நிறைய எண்ணெய் சுரப்பிகள் உண்டு. இவை வேகமாக நெய்ப்புத்தன்மையான சுரப்பை சுரப்பதால் தோல் துவாரங்கள் அடைபட்டு பருக்களாக மாறும். சிலருக்கு பரம்பரையாகவும் ஏற்படும். சீதோஷ்ண நிலையில் ஏற்படும் மாறுபாடு பல்வேறு அழகு சாதனங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் ஒவ்வாமையால் கூட முகப் பருக்கள் வரலாம்.

பருக்களில் இருந்து முகத்தைப் பாதுகாக்க

● "முகத்தை அடிக்கடி இளஞ்சூடான நீரில் கழுவல்"

● தலையில் பொடுகு இருப்பின் அதனை நீக்க வேண்டும்.

● கடலைமா, பயிற்றம்மா கலந்த கலவையை சோப்புப் பொடியா பயன்படுத்தல்.

● வேப்பங்கொழுந்தினை மைபோல அரைத்து சில சொட்டு நல்லெண்ணெய் விட்டு Paste போல செய்து பருவின் மீது பூசி வர பருக்கள் உடையும்.


● பெரிய பருக்களாக இருப்பின் வெள்ளைப் பூண்டை அரைத்து பருக்களின் நுனிப்பகுதியின் மீது மட்டும் பற்றிட வேண்டும். (வெள்ளைப் பூண்டை வாட்டி சாறெடுத்து பயன்படுத்த வேண்டும்).


● சுத்தமான புனுகை (தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கலாம்) பருக்களின் மீது தடவ விரைவில் அவை பழுத்து உதிரும்.

● பருக்களால் பாதிக்கப் பட்ட பகுதியில் எலுமிச்சை இலையை கழுவி அரைத்து பூசி சிறிது நேரம் கழித்துக் குளிக்கவும்.

● துவரம் பருப்பை பொடி செய்து வைத்துக் கொண்டு அதில் தயிரை விட்டு கூழ் போலாக்கி முகத்தில் பூசிக் கொண்டு, பின்னர் துடைக்க முகப்பரு மறையும்.


● சின்ன வெங்காயத்தை இரண்டாக நறுக்கி பரு உள்ள இடத்தில் தேய்க்க குணமடையும்.











● முகப்பரு அகல சாதிக்காய், சந்தனம் இரண்டையும் பட்டுப்போல அரைத்து தடவல்.

● முகப்பருவுக்கு கஸ்தூரி மஞ்சள், சுத்தமான சந்தனம் இரண்டையும் நெகிழ அரைத்து இரவில் முகத்தில் பூசி காலையில் கழுவ மாறும்.

● முகப்பரு உள்ளவர்கள் புதினா இலை, செம்பருத்தியிலை, மல்லிகையிலை இவற்றை சிறு அளவு எடுத்து நன்கு கழுவி தயிரில் அரைத்து முகப்பருவுக்கு பூசலாம்.

● படிகாரம்/ சீனாக்காரம் 35 மில்லிகிராம் எடுத்து 200 மில்லிலீற்றர் நீரில் கரைத்து முகம் கழுவி வர முகப்பரு நீங்கும்.

● ஊமத்தம் பூவை கசக்கி பருக்களின் மீது பூச பருக்களில் உள்ள வலி நீங்கி பரு உடையும்.

● கருந்துளசி இலையை அரைத்து பருக்களின் மீது பற்றிட பரு உடையும்.

● வட்டத்துத்தி இலையை அரைத்து பருக்களுக்குப் பற்றிட பரு குணமாகும்.

● சீரகம், கருஞ்சீரகம் சம அளவு எடுத்து பசுப்பால் விட்டரைத்து குளிக்க முன் இவ்விழுதை 1 மணி நேரம் ஊறிய பின் கழுவ பருக்கள் குறையும்.

● சுத்தமான வெள்ளைத் தேன் மெழுகை பொடி செய்து வெண்ணெய், கிளிசரின் கலந்து அதனை சூடாக்க உருகும். அதனை இளஞ் சூட்டுடன் பருக்கள் மீது பூச பரு விலகும்.

மேற்கூறியவற்றை முகப் பருவுக்கு வெளி மூலிகை மருந்தாக பயன்படுத்தும் போது உள்மருந்துவமாக தண்ணீர் விட்டுப் பிழிந்த வேப்பிலைச் சாற்றில் 2 தேக அளவு வெறும் வயிற்றில் பருக வேண்டும்.

எலுமிச்சைப்பழம் சாற்றை வெந்நீரில் கலந்து தினமும் உட்கொண்டுவர பருக்கள் படிப்படியாகக் குறையும்.

கறிவேப்பிலை கொழுந்தை பறித்து அரைத்து உடன் தயிர் சேர்த்து தினமும் அதிகாலை வெறும் வயிற்றில் பருகிவர வேண்டும்.

இரவு படுக்கப் போகும் முன்பு வெந்நீரையும் காலை எழுந்ததும் பல் துலக்கி குளிர்ந்த நீரையும் பருகிவர வேண்டும். இதனால் உஷ்ணம் தணிந்து பருக்களின் ஆதிக்கம் குறையும்.

● எண்ணெய்ப் பொருட்கள், எண்ணெயில் பொரித்தவை, கொழுப்பு உணவுகள், காரம், உப்பு, புளி என்பவற்றை அளவுடன் உண்ண வேண்டும்.

● இனிப்பு, மாப்பண்டம் தவிர்த்தல்.

● தக்காளி, வெண்டி, கரட் போன்ற பச்சைக் காய்கறி, நார்ச்சத்து பொருட்களை அதிகம் உண்ண வேண்டும்.

● மலச்சிக்கல் பருவிற்கு காரணம். ஆதலால் மலச்சிக்கல் நீங்க கீரை, நீரை அதிகம் உண்ணல்.

● மாமிச உணவு, மசாலா வகைகளைத் தவிர்த்தல்.

● காலையில் தயிர் சாதத்துடன் கனிந்த வாழைப்பழத்தை உண்ணல்.

முகத்தில் கரும் புள்ளிகள் ஏற்பட்டால்

● அரிசி மாவை கூழ் போல செய்து இளஞ்சூட்டில் முகம் முழுவதும் பூசி பேக்கிங் செய்து கழுவிவர கரும்புள்ளிகள் மறையும்.

● ஒரு எலுமிச்சை பழத்தை சாறு பிழிந்து தயிர் சம அளவு சேர்த்தால் கிறீம் போல் ஆகும். இதனை முகத்தில் பூசி 15 நிமிடம் கழிய வெந்நீரில் முகம் கழுவி வர கரும்புள்ளி மறையும்.

● கரும்புள்ளி மறைய சாதிக்காயை அரைத்து தடவ குணமாகும்.

● உருளைக்கிழங்கை இரண்டாக வெட்டி கரும் புள்ளியில் தேய்க்க மறையும்.

● முகத்தை நன்றாகக் கழுவி சுத்தம் செய்த பின் படுக்கப் போகும் முன் 2 தேக்கரண்டி கறிவேப்பிலைச் சாறு, அரைத்தேக்கரண்டி மஞ்சள் பொடி கலந்து கரும்புள்ளிகள் மற்றும் வடுக்களின் மீது தடவி வர குணமாகும்.

● முள்ளங்கிச் சாற்றை சமமாக மோருடன் கலந்து முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி வர கரும் புள்ளி நிவர்த்தியாகும்.

● அதிமதுரம்-30 கிராம், தாமரைக்கிழங்கு-30 கிராம், அல்லிக்கிழங்கு-30 கிராம், அறுகம்புல்-30 கிராம், வெட்டிவேர்-30 கிராம், ஜடாமாஞ்சில்-30 கிராம், மரமஞ்சள்-30 கிராம் இவைகளை நுண்ணிய பொடியாக்கி வைத்துக்கொண்டு நீரில் கலந்து கரும்புள்ளிக்கு பூசிவர குணமாகும்.

● பாதாம் பருப்பு பொடி - 1/2 ஸ்பூன், கடலை மாவு - 1 ஸ்பூன், எலுமிச்சை சாறு - 1/2 ஸ்பூன் இவற்றை சேர்த்து பேஸ்ட் போலாக்கிக் கொள்ளவும். அதனை குளிக்க முன் 1/2 மணி நேரம் முகத்தில் பூசி தேய்த்துக் கொண்டு பின் சுத்தமான நீரில் குளிக்கவும். இம் மாதிரி 15 நாட்கள் செய்ய கரும்புள்ளி, வடுக்கள் மறையும்.




தொடரும்...

# சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் வடக்கு ஆளுநர் ராகவன் சந்திப்பு

## சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்தன ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்றுக் காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது வடமாகாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், வடமாகாணத்தில் இடம்பெறும் சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலும், யாழ். மாவட்டத்திலே அதிகளவிலான சமூக விரோதச் செயல்கள் இடம் பெறுவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

மேலும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், வடக்கு மாகாணத்தில் முக்கியமாக மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு பொலிஸார் ஏனைய பாதுகாப்பு தரப்பினருடன் இணைந்து ஆரோக்கியமான செயற்றிட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக் கொண்டார். (இ-5-7)

# ஜனாதிபதியின் முகநூல் கணக்கை முடக்கி காணொலி பதிவேற்றம்




(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரபூர்வ முகநூல் கணக்கு, முடக்கப்பட்டு, நேரலையான காணொலி ஒன்று ஒளிபரப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ முகநூல் கணக்கில் திடீரென நேரலை காணொலி ஒன்று பதிவேற்றப்பட்டது. ஐந்து நிமிடங்களுக்கு வாகனப் போக்குவரத்து தொடர்பாக காட்சி ஒளிபரப்பப் பட்டது.

முகநூல் கணக்கினுள் நுழைந்து யாரேனும் இந்தப் பதிவை இட்டனரா அல்லது, ஜனாதிபதி ஊடகப் பிரிவால் தவறுதலாக இந்தப் பதிவேற்றம் நிகழ்ந்ததா? என்று சம்பந்தப்பட்ட தரப்பினரே விசாரிக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# பிரதமரின் வருகையை முன்னிட்டு யாழில் விசேட பாதுகாப்பு



(யாழ்ப்பாணம் )

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதால், பல பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டுள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி சமுர்த்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக யாழ்ப்பாணத்திற்கு பிரதமர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகம் மற்றும் மணியம் தோட்டப் பகுதி உள்ளிட்ட யாழ். நகரப் பகுதிகளில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பிரதமர் விஜயம் மேற்கொள்ளவுள்ள பகுதிகளிலுள்ள குடும்பங்களின் விபரங்களையும் பொலிஸார் சேகரித்து வருகின்றனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பிரதமரின் வருகையை முன்னிட்டு, விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-101)

# மாணவர்களுக்கான செயற்பாட்டு முகாம்

(கொடிகாமம்)


கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் இன்று 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். (5-114)

# குருநாகல் வைத்தியர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் தண்டனை - ராஜித

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியரை ஒருபோதும் நிரபராதியாக நான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, அவர் மீது சுகாதார அமைச்சினூடாக விசாரணைகளை முன்னெடுக்கவென வைத்திய சபையின் வைத்தியர் ஒருவரின் பங்கேற்புடன் அனுபவம் வாய்ந்த மூன்று வைத்தியர்கள் அடங்கிய விசாரணை குழுவொன்றை நியமிக்க பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.



விசாரணைகளின் பின்னர் அவர் குற்றவாளியென நிரூபிக்கப்படுவாராக இருந்தால் அவருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் சுகாதார அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு ஏற்பவும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியளாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தேசிய கல்வியியற் கல்லூரிக்கான அனுமதி ஜூன் மாதம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர் அனுமதிப்பதற்கான நேர்முகத் தேர்வு ஜூன் மாதம் மூன்றாம் வாரத்தில் இடம்பெறுமெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இம்முறை 2016 மற்றும் 2017 க.பொ.த உயர்தரப் பெறு பெறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான கல்விப் போதனா பாடநெறிக்காக இரு குழுக்கள் ஒரே தடவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (5-10)

# சந்தை வியாபாரிகளின் கோரிக்கைக்கு சாவகச்சேரி வணிகர் மன்றம் ஆதரவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்குவது என நகரசபையினர் எடுத்த தீர்மானத்தைக் கண்டித்து சந்தை வியாபாரிகள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும் ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக கடிதம் ஒன்றினையும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் நகரசபைத் தவிசாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் எமது சாவகச்சேரி நகர் மரக்கறி வியாபாரிகளின் கோரிக்கைக்கான கடையடைப்பு போராட்டத்திற்கு எமது ஆதரவையும் கோரி நிற்பதால் எமது மன்று அக் கோரிக்கையை ஏற்று தனது பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொண்டுள்ளது.

எனவே இது தொடர்பாக ஏதேனும் தங்களின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக எமக்கு அறியத்தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபையின் தற்போதைய சபைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இரண்டாவது ஆர்ப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் கடந்த வருட இறுதியில் சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்தி வங்கிக்கான தமது காணியைத் தருமாறு கோரி போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(சிகிரியா)

சிகிரியாவை பார்வையிடும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக சிகிரியா மேலதிக பணிப்பாளர் மேஜர் அநுர நிஷாந்த தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# குருநாகல் வைத்தியரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தூக்கிலிடுங்கள்-மரிக்கார்



(வெல்லம்பிட்டிய)

குருநாகலில் கைதுசெய்யப்பட்டுள்ள வைத்தியர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரை தூக்கிலிட வேண்டும். அதனால் எந்தப் பிரச்சினையும் கிடையாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், 8000 சத்திர சிகிச்சைகளை செய்திருக்கின்றார் என்றால் அவர் 20 வருடங்களுக்கும் அதிகமாக வைத்தியர் தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

அவ்வாறிருந்தாலும் இத்தனை சத்திர சிகிச்சைகளை செய்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகளை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

இப்புள்ளிவிபரங்களிலிருந்து அன்றைய காலகட்டத்தில் விருப்புக்குரிய தொழில்களில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் எந்தளவிற்கு இடம் பெற்றிருந்திருக்கின்றனர் என்பதை அறியமுடியும்.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இந்நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்கள் பின்னர் ஆராயப்படும். அதாவது சிங்கள மக்களுக்கு பல்வேறு உயர் பதவிகளுக்கான அதிக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதைப் புள்ளிவிபரங்கள் காட்டிநிற்கின்றன. (அட்டவணை-I)

விருப்புப் பதவிகளில் இனவாரியான எண்ணிக்கை 1921 (அட்டவணை-I)

| இனம் | விருப்புக்குரிய தொழில்களில் ஆண்கள் | மொத்த இலங்கையர் (20 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்) |
|---|---|---|
| கரையோரச் சிங்களவர் | 912 | 509909 |
| கண்டிச் சிங்களவர் | 75 | 281045 |
| மொத்தச் சிங்களவர் | 987 | 790954 |
| இலங்கைத் தமிழர் | 684 | 139361 |
| பறங்கியர் | 380 | 83070 |
| முஸ்லிம்கள் | 40 | 7852 |
| ஏனையோர் (மலாயர் உட்பட) | 51 | 18970 |
| மொத்த இலங்கையர் | 3129 | 1831161 |

1946 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தச் சனத்தொகையை வலயம், மாவட்டம் என்ற அடிப்படையில் காட்டுகின்றன. மேலும் சமூக அல்லது இனவாரி அடிப்படையில் 1946 ஆம் ஆண்டு சனத்தொகைப் புள்ளிவிபரங்கள் 1948 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்ற அரசியல் நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் முக்கியமானவையாகும்.

குறிப்பாக 1946 ஆம் ஆண்டு இலங்கைச் சனத்தொகையில் சிங்கள மக்கள் 70 வீதமாகவும் தமிழர் 22.7 வீதமாகவும் காணப்படுகின்றனர். மேலும் இலங்கைத் தமிழரை விட இந்தியத் தமிழர் எண்ணிக்கையில் கூடுதலாக அதாவது 1946 இல் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இருந்திருக்கின்றனர்.



மலையகத் தமிழர்

சனத்தொகைப் பரம்பல் 1921-1946

| புவியியல் வலயங்கள் | மாவட்டங்கள் | 1921 | 1946 |
|---|---|---|---|
| தெற்கு மேற்கு | கொழும்பு | 923143 | 1420332 |
| | களுத்துறை | 323704 | 456572 |
| | காலி | 313118 | 459785 |
| | மாத்தறை | 238509 | 351947 |
| | மொத்தம் | 1798474 | 2688609 |
| மலைநாடு | கண்டி | 433993 | 711449 |
| | மாத்தளை | 116584 | 155720 |
| | நுவரெலியா | 167162 | 268121 |
| | பதுளை | 233864 | 372233 |
| | இரத்தினபுரி | 202975 | 343620 |
| | கேகாலை | 268339 | 401762 |
| | மொத்தம் | 1423417 | 2252910 |
| கிழக்குக் கரையோரம் | மட்டக்களப்பு | 158709 | 203186 |
| | திருகோணமலை | 34112 | 75926 |
| | மொத்தம் | 192821 | 279112 |
| யாழ். மாவட்டம் | யாழ்ப்பாணம் | 330541 | 424768 |
| உலர்வலயம் | மன்னார் | 25582 | 31538 |
| | வவுனியா | 18706 | 23246 |
| | அநுராதபுரம் | 96525 | 139534 |
| | குருநாகல் | 354197 | 485042 |
| | புத்தளம் | 35610 | 43033 |
| | சிலாபம் | 102374 | 139764 |
| | அம்பாந்தோட்டை | 119607 | 149686 |
| | மொத்தம் | 1083142 | 1436611 |

இனவாரியான இலங்கைச் சனத்தொகை -1946

| இனம் | தொகை | நூற்றுவீதம் |
|---|---|---|
| கரையோரச் சிங்களவர் | 2902509 | 43.6 |
| கண்டிச் சிங்களவர் | 1718998 | 25.8 |
| இலங்கைத் தமிழர் | 733731 | 11.0 |
| இந்தியத் தமிழர் | 780589 | 11.7 |
| இலங்கை முஸ்லிம் | 373559 | 5.6 |
| இந்திய முஸ்லிம் | 35624 | 0.6 |
| மலே இனத்தவர் | 22508 | 0.3 |
| பறங்கி, யுரேசியன் | 41926 | 0.6 |
| ஐரோப்பியர் | 5418 | 0.1 |
| வேடர் | 2361 | 0.0 |
| ஏனையோர் | 411 | 60.7 |
| மொத்தம் | 6658339 | 100.00 |

### மலையகத் தமிழர்

இவ் ஆய்வு இலங்கையின் பூர்வீகத் தமிழர் பற்றிய ஓர் ஆய்வாகும். ஆனால் இலங்கையில் தமிழ்மொழியைப் பேசுகின்ற முஸ்லிம் இனத்தவரும் வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் வரையறைக்குள் இருந்து விலகிக் காணப்படுவதால் அவர்களைப் பற்றிய ஆய்வு இங்கு இடம்பெறவில்லை.

இவர்களை விட 1840களிலிருந்து பிரித்தானியப் பெருந்தோட்டச் செய்கையாளரால் இலங்கையின் மலையகப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பொருட்டு தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழ்மொழி பேசுகின்ற தொழிலாளர் முக்கியமானவர்களாகும்.

இவர்கள் இலங்கையின் பூர்வீகத் தமிழருடன் வரலாறு, சமயம், மொழி, கலை, கலாசாரம், சமூகம் அரசியல் ரீதியாக நெருங்கிய ஒன்றுபட்ட உறவுகளை உடையவர்கள்.

இவர்கள் இலங்கைத் தமிழ்த் தேசியக் கோட்பாட்டின் வரையறைக்குள் பலவகையாலும் நெருக்கமான ஒற்றுமைகளைக் கொண்டுள்ளபோதும் புவியியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் வேறுபட்ட நிலையில் காணப்படுகின்றனர்.


இருப்பினும் இவர்கள் 1830 ஆண்டு முதல் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து மலையகப் பகுதிகளில் உள்ள பெருந்தோட்டங்களில் தொடர்ச்சியாகத் தொழில் புரிந்து இலங்கைப் பிரஜாவுரிமையையும் தேர்தலில் வாக்களிக்கும் அந்தஸ்தையும் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் மலையகத் தமிழரின் பிரச்சினை பெரும் அரசியல் பிரச்சினையாக உருவெடுத்தது. தொடர்ந்து வந்த காலங்களிலும் மலையகத் தமிழர் இலங்கை அரசியலில் குறிப்பாக இலங்கைத் தமிழர் அரசியலில் மிக முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

மேலும் 1977,1981, 1983களில் இலங்கைத் தமிழருக்கு எதிராக சிங்களத் தேசியவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளின் போது மலையகத் தமிழரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

குறிப்பிட்டளவு மலையகத் தமிழர் மலையகப் பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்து தமிழரின் பிரதேசங்களில் குறிப்பாக வன்னிப் பிரதேசங்களில் குடியேறி அங்கு தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.(தொடரும்)

# மகிந்த அணி ஆட்சிக்கு வந்தால் ஆயுதக்குழுக்கள் பிரகாசமடையும்!



## யோகேஸ்வரன் எம்.பி. கவலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணி ஆட்சிப் பீடம் ஏறினால் துளிர்விடும் துணை ஆயுதக்குழுக்கள் பிரகாசமடைந்து விடும் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித் தார்.

கடந்த 26ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற நிகழ் வில் கலந்து கொள்ள வந்த போது, மகிந்த அணி ஆட்சிக்கு வந்தால் எவ்வாறான நிலைமை ஏற்படும் என ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது தமிழ், முஸ்லிம் மக்கள் பாரிய நெருக்கடிகளைச் சந்தித் துள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில் பல இளைஞர்கள் கடத் தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட னர்.

இவ்வாறான சம்பவங்கள் தற் போதைய ஆட்சியில் பெருமளவு குறைந்திருந்தாலும் ஓரிரு சம்ப வங்கள் கிழக்கில் இடம்பெற்றன.

அரச ஆதரவுப் படைகளுடன் இணைந்து இயங்கிய கருணா, பிள்ளையான் குழுவினர் தற்போ தைய ஆட்சியிலும் துளிர்விட ஆரம்பித்துள்ளனர்.

2009 ஆண்டு யுத்த காலத் தில் இடம் பெற்ற கடத்தல், கொலை களுடன் இவ் அமைப்பினருக்கு நேரடித் தொடர்புள்ளது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கமும் இவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கா மல் காலம் தாழ்த்தி வருகிறது.

பொலநறுவை மாவட்டத்தில் தீவுச்சேனைப் பகுதியில் கருணா குழுவினரால் கொலை செய்யப் பட்டு புதைகக்கப்பட்ட மனிதர்க ளின் எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யா மல் நிலுவையில் உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை வீழ்த்துவதற்கு கருணா அம்மான் உதவினார் என்ற காரணத்தால் அரசாங்கம் இவர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக சந்தேகம் எழுகின்றது.

எனவே குறுக்கு வழிகளிலா வது ஆட்சியைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற நோக்கத்தில் காய் நகர்த்தி வரும் மகிந்த ஆத ரவு அணி ஆட்சிப் பீடம் ஏறினால் தமிழ், முஸ்லிம் மக்கள் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என யோகேஸ்வரன் எச்சரிக்கை விடுத்தார். (இ-10)

# பாதிப்புக்குள்ளான தாய்மாருக்கு அரசு நட்டஈடு வழங்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

வைத்தியர் முஹம்மத் ஷாபி மேற்கொண்ட சிசேரியன் சத் திரசிகிச்சையால் தாய்மார்க ளுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருப்பின் அதற்காக அரசாங்கம் உடன டியாக அவர்களுக்கு நட்ட ஈடு செலுத்த வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.



குருநாகல் அரசு வைத்தி யசாலையில் பாதிப்புக்குள்ளான தாய்மாருக்கு அரசாங்கத்தால் நட்ட ஈடு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1733

### ஸ்டாலின்

சண்டையிட்டு விலகிய பின்னும் சொன்ன இரகசியம் காக்கப்படுமாயின் அதுவே சிறந்த உறவு/ நட்பு ஆவுறான்



### ஷ்யாம்

மரண பீதின்னா என்னன்னு சிலர்கூட வண்டியில போனாலே தெரிஞ்சிடும்




### சஞ்சீவ்

உலகம் ஒருநாள் மாறும்னு சொல்றதைவிட ஏறும்னு சொன்னாதான் பொருத்தமா இருக்கும் பஸ் டிக்கட் விலை ஏற்றம்... மாற்றம்... ஏமாற்றம்



### ஆதித்தியா

நான் வந்துட்டேன்னு சொல்லு திரும்பி வந்துட்டேன்னு சொல்லு



### கமலன்

மனைவி கோபமா இருக்கும்போது ஆம்லட் கேட்கக்கூடாது



### சிவாசா

இப்ப திருடுங்கடா பார்க்கலாம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அமெரிக்கா முன்னரே அறிந்திருந்ததா?

## சரத் வீரசேகர சந்தேகம்



(கொழும்பு)

நாட்டில் முப்பது வருடகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் இடம்பெற்றுவந்த போது உதவிக்கு வராத அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று 24 மணிநேரத்திற்குள் விசாரணைகளுக்கு உதவுவதற்கென இலங்கைக்கு வந்துவிட்டார்கள்.

எனவே குண்டுத்தாக்குதல் தொடர்பில் அறிந்து முன்னரே தயார் நிலையில் இருந்தார்களா? என்ற சந்தேகம் எழவே செய்கின்றது என்று இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கையில் அமெரிக்காவின் தலையீடுகள் குறித்து தொடர்ச்சியாக தனது அதிருப்தியை வெளிப்படுத்தி வந்திருக்கும் அட்மிரல் சரத் வீரசேகர இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத்தாக்குதல்களின் பின்னர், பாதுகாப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு உதவி வழங்குவதற்கென அமெரிக்க புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இலங்கை வந்திருக்கின்றார்கள்.

அவர்கள் உண்மையிலேயே விசாரணைகளுக்கு உதவும் நோக்கில் இங்கு வந்திருந்தால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் எமது அழைப்பின் நிமித்தமா? அல்லது அவர்களாகவே வருகை தந்தார்களா? என்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என சரத் வீரசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

### குற்றவாளிக்கு வெள்ளையடிப்பு செய்யக்கூடாது

# மகப்பேற்று வைத்தியரிடம் மன்னிப்புக்கோரத் தயார்

## காவிந்த எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

கைதுசெய்யப்பட்டுள்ள குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் எந்தவொரு குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்பது விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுமானால் அவரிடம் மன்னிப்பு கோருவதற்குத் தயாராகவே இருக்கின்றேன் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சியொன்றில் நேற்று முன்தினம் ஒளிபரப்பப்பட்ட அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநாகலில் கைது செய்யப்பட்ட வைத்தியரை பாதுகாக்கும் நோக்கில் அரசியல்வாதிகள் சிலர் கருத்துகளை முன்வைக்கின்றனர். அவர் குற்றமிழைக்கவில்லை என்பது விஞ்ஞான பூர்வமான விசாரணைகள் மூலமே உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மாறாக அவர் நல்லவர், வல்லவர் என வாய்மூலம் அறிவிப்புக்களை விடுப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை.

குறித்த வைத்தியருக்கு எதிராக படுபயங்கரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கும், அதிகாரிகளுக்கும் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கவேண்டும். இந்த விடயத்தில் அரசியல் தலையீடுகள் இருக்கவே கூடாது. அத்துடன், அதிகாரிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படும் என அரசியல்வாதிகள் அழுத்தங்களையும் பிரயோகிக்கக்கூடாது.

என்ன நடந்தாலும், எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் நாம் அதிகாரிகளின் பக்கமே நிற்போம். எனவே, துணிகரமாக விசாரணைகளை நடத்தி உண்மைகளைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்கின்றேன். குற்றவாளிகளுக்கு எவரும் வெள்ளையடிப்பு செய்யக்கூடாது.

முதலில் விசாரணைகள் நிறைவடையட்டும். வைத்தியர் குற்றமிழைக்கவில்லை. எமது தரப்பில்தான் தவறிழைக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுமானால் நாம் மன்னிப்பு கேட்கவும் தயங்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டம் இலங்கையுடன் கைகோர்க்க இந்தியா முடிவு

(டில்லி)

இலங்கையில் சீனாவின் செல்வாக்கை சமப்படுத்தும் வகையில், ஜப்பான் மற்றும் இலங்கையுடன் இணைந்து கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முன்னெடுக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள பா.ஜ.க. அரசாங்கத்தின் முதலாவது வெளிநாட்டு கொள்கை நகர்வாக இந்த முடிவு அமைந்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இது, மூன்று நாடுகளும் இணைந்து முன்னெடுக்கவுள்ள கொழும்பு துறைமுக நகர திட்டத்தை முன்னெடுக்கும் விடயத்துக்கு ஊக்கமாக அமையும் என்று இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளும் திறனை அதிகரிப்பதே இந்த முத்தரப்பு திட்டத்தின் நோக்கமாகும்.

பிராந்தியத்தில் சீனா பல்வேறு திட்டங்களின் மூலம், தனது செல்வாக்கை உயர்த்தி வருகின்ற நிலையிலேயே இந்தத் திட்டத்தை கூட்டாக முன்னெடுக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை கூட்டாக அபிவிருத்தி செய்யும் விடயத்திலும், ஜப்பானும் இந்தியாவும் கண் வைத்துள்ளன.

இந்நிலையில் கொழும்பு துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் உள்ள கிழக்கு கொள்கலன் முனையத்தை மூன்று நாடுகளும் கூட்டாக அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளன. இதன் மூலம், பாரிய கொள்கலன் கப்பல்கள் இலங்கைக்கு வரும் வாய்ப்புகள் கிடைக்கும்.

இந்தத் திட்டம் தொடர்பாக மூன்று நாடுகளின் அரசாங்கங்களும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன. இந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில், அடுத்த சில மாதங்களுக்குள் உடன்பாடு கையெழுத்திடப்படும்.

இந்தத் திட்டத்துக்கு தனியார் துறை பங்களிப்பும் கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## நீச்சல் குளத்தில் மூழ்கி பொலிஸ் அதிகாரி பலி!

(பமுனுகம)

பமுனுகம, அலேன்எகொட பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றின் நீச்சல் குளத்தில் மூழ்கி பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த பொலிஸ் அதிகாரி தனது கடமைகள் நிறைவடைந்த பின்னர் நீச்சல் குளத்தில் நீராடுவதற்காக சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் நீரில் மூழ்கிய நிலையில் பமுனுகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார். கடான, கிம்புலாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், துன்கல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் பமுனுகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

(மீகஹதென்ன)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட போரா 12 வகை துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவரை மீகஹதென்ன பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8.35 மணியளவில் மீகஹதென்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலவத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஆட்டோ ஒன்றை சோதனையிட்டபோது வெளிநாட்டு துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்கான 4 தோட்டாக்களை வைத்திருந்த நிலையிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (இ-7)

## பர்தாவை அகற்ற மறுத்து பணியைத் துறந்த வைத்தியர்

(ஹோமாகம)

பர்தாவை அகற்றி விட்டு கடமைக்கு வருமாறு பணித்த நிலையில், வைத்திய ஒருவர் தனது தொழிலை இராஜினாமா செய்துள்ள சம்பவம் ஹோமாகம வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இறுதியில் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர், பர்தாவுடன் குறித்த வைத்தியர் தனக்கு சிகிச்சை அளிக்க வந்த நிலையில் அதற்கு எதிர்ப்பை தெரிவித்தார்.

இந்நிலையில் வைத்தியசாலை நிர்வாகம், பர்தாவை அகற்றி விட்டு பணிக்கு வருமாறு குறித்த வைத்தியரைப் பணித்தது.

இந்நிலையில் குறித்த வைத்தியர் முன்னறிவிப்பு இன்றி பணிக்கு வருகை தராதிருந்தார்.


இதனைத் தொடர்ந்து அவர் தனது இராஜினாமா கடிதத்தை வைத்தியசாலையின் நிர்வாகத்திடம் கையளித்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 130 | 150 | 200 |
| தக்காளி | 140 | 110 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 140 | 140 |
| கோவா | 130 | 120 | 80 | 80 |
| கரட் | 100 | 150 | 140 | 90 |
| பூசணி | 80 | 60 | 70 | 65 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 65 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 80 | 75 |
| பாகற்காய் | 180 | 180 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 | 50 |
| பயற்றங்காய் | 150 | 140 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 90 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 120 | 100 |
| போஞ்சி | 250 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | — | 80 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 450 | 450 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 35 |
| இராசவள்ளி | 200 | 160 | 140 | 100 |
| வெங்காயப்பூ | 150 | 200 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 45 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | — | — |




# லட்சுமி கடாட்சம்



முன்னொரு காலத்தில் மாமுனிவர் ஒருவர் காட்டில் தவம் செய்து வந்தார். சிறு வயதிலிருந்தே தவக்கோலம் பூண்டு இறைவனை தொழுது வந்ததால், அந்தக் காட்டில் வசித்த கொடிய மிருகங்கள் கூட அவரிடம் குழந்தைகளை போல நடந்து கொண்டன.

ஒரு நாள் அவர் முன் அழகிய பெண் ஒருத்தி தோன்றினாள். அவளது பேரழகு பிரமிக்க வைத்தது. இருப்பினும் மனம் சலனப்படாமல் அந்த அழகியைப் பார்த்து. "அம்மா நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தான் மகாலட்சுமி. என்னுடைய விதிப் பயனால் சில நாட்கள் உங்களுடன் வசிக்க வந்துள்ளேன். நீங்கள் என்னை உதறித் தள்ளினாலும் உங்களை விட்டு நான் போகமாட்டேன். பிரம்மன் கட்டளைப்படி நான் உங்களுடன் இருந்தாக வேண்டும்" என்றாள்.

மகாலட்சுமி போகமாட்டாள் என்பதை அறிந்த முனிவர் அந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதித்தார்.

"அம்மா நீங்கள் வரும் பொழுது என்னிடம் சொல்லிக் கொண்டு வந்தது போல போகும் போதும் சொல்லிக் கொண்டே போக வேண்டும்" என்றார்.

லட்சுமியும் சம்மதித்தாள். அன்றிலிருந்து தன்மீது லட்சுமியின் அருள் பூரணமாக இருப்பதை அறிந்தார். அதை சோதித்துப் பார்க்க விரும்பினார் முனிவர். எனவே, காட்டை விட்டு பொற்குன்றம் என்ற மாநகரை அடைந்தார். அந்த அரண்மனையின் அரசரும் அமைச்சர்களும் அமர்ந்திருந்தனர்.

வேகமாகச் சென்ற முனிவர் தனது இடது காலை தூக்கி மன்னனது கிரீடத்தை ஒரு உதை விட்டார். மறுநிமிடம், "அடி, உதை, அவனைப் பிடி!" என்றபடியே ஆயிரம் சேவகர்கள் முனிவரைச் சூழ்ந்து கொண்டனர்.

உடனே அரசன், "முனிவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் திரிகாலமும் உணர்ந்த ஞானி. என் கிரீடத்தை பாருங்கள்" என்றான்.

கிரீடத்தில் விச நாகம் ஒன்று படமெடுத்துக் கொண்டிருந்தது. உடனே எல்லாரும் மகாபுருஷரை திட்டிவிட்டோமே என்று நினைத்து வருந்தினர். அதற்குள் விச நாகம் ஓடி மறைந்தது. உண்மையில் அது விச நாகமல்ல, லட்சுமிதான் நாக உருவெடுத்து முனிவரை காப்பாற்றினாள்.

அன்றிலிருந்து அரசன் மாமுனிவருக்கு அமைச்சுப் பதவி கொடுத்து சர்வ அதிகாரமும் கொடுத்தான். முனிவருக்கு லட்சுமி கடாட்சம் இருந்ததால் அவர் செய்ததெல்லாம் பலித்தது. முனிவரும் நாட்டை நல்ல முறையில் ஆண்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. மீண்டும் ஒரு நாள் தன்னுடன் லட்சுமி இருக்கிறாளா? என்பதை அறிய விரும்பினார் முனிவர்.

அன்றிரவு அரசனும் அரசியும் தூங்கிக் கொண்டிருந்த பள்ளியறைக்குச் சென்றார். இருவரையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

கண் விழித்த மன்னன் அந்தக் கிழவனின் தலையை வெட்டினால் என்ன என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். அதற்குள் பள்ளியறை கட்டடம் இடிந்து விழுந்தது. அதை பார்த்த அரசனுக்கு மாமுனிவர் மேல் அளவிடாத பாசம் வந்தது.

"முனிவரே! நீர் இல்லாவிட்டால் நாங்கள் இருவரும் இறந்திருப்போம்!" என்றார்.

இந்த விடயத்தை அறிந்த நாட்டு மக்கள், முனிவரை தெய்வமாகவே பாவித்தனர்.

ஒரு நாள் அரசன் தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். ஒரு மானை துரத்திக் கொண்டு ஓடினார் மன்னன். அவர் பின்னாலே சென்றார் முனிவர்.

மான் தப்பிவிட்டது. களைத்துப் போன மன்னனும் முனிவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். முனிவரது மடியில் சற்று நேரம் இளைப்பாற விரும்பினார் மன்னர். முனிவரும் சம்மதித்தார்.

அப்பொழுது மேலே பார்த்தார் முனிவர். அந்த மரத்தின் கிளை மேல் கருடன் ஒன்று பெரிய நாகத்தை தூக்கி வந்து தின்பதற்காக உட்கார்ந்திருந்தது. அந்த மரத்தின் கிளை அரசனுடைய மூக்குக்கு நேராக இருந்தது.

மாமுனிவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எழுந்து கருடனை விரட்டினால் மன்னனது தூக்கம் கெட்டுவிடும். நாகத்தினால் அரசனுக்கு தீங்கில்லை என நினைத்து விட்டுவிட்டார். கருடன் பாம்பை கொத்தியது. பாம்பு தன் விசத்தை கக்கவே அது மன்னனின் கழுத்தில் வந்து விழுந்தது.

கால சர்ப்பத்தின் விசம் என்ன செய்யுமோ என பயந்த முனிவர், தன் கத்தியால் அதை வழிக்க நினைத்தார்.

அப்பொழுது லட்சுமி, "நான் தங்களை விட்டுப்போக வேண்டிய நேரம் வந்துவிட்டது, செல்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டாள்.

கத்தியை எடுத்து அரசரின் கழுத்தில் வைத்தார் முனிவர். உடனே கண் விழித்தார் அரசன், "இப்படிப்பட்ட பாதக செயலை நீங்கள் செய்வீர்கள் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை" என்று கோபப்பட்டார்.

முனிவரோ, "மன்னா நான் உங்களை கொல்லவேண்டுமென்றால் எப்பொழுதோ கொன்றிருக்கலாம். சற்று தலையை தூக்கிப் பாருங்கள். கருடன் வாயிலிருக்கும் பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விசம் உங்கள் கழுத்தில் விழுந்துவிட்டது. அதை எடுக்கவே இப்படி செய்தேன். இனி நான் உங்களுடன் இருக்கமாட்டேன். லட்சுமி கடாட்சம் என்னை விட்டுப் போய் விட்டது" என்றார். மன்னன் மிகவும் மன்னிப்புக் கேட்டார். தாங்கள் என்னை விட்டுச் செல்லக் கூடாது எனக் கூறினார்.

நடந்தவைகளை எல்லாம் கூறிய முனிவர், "எனக்கு என்ன இருக்கிறது. நான் ஒரு முனிவர். லட்சுமி என்னுடன் இருந்தவரையில் எனக்கு ஆபத்து இல்லை. இனி நான் தங்களுடன் இருப்பதில் பயனில்லை. விடை கொடுங்கள் நான் காட்டிற்குச் செல்கிறேன்" என்றார்.

மன்னன் எவ்வளவோ கெஞ்சியும் முனிவர் அவருடன் இருக்க சம்மதிக்கவில்லை. தன்னை விட்டு லட்சுமி போன பிறகு மன்னனுடன் இருப்பது தனக்கு மிகுந்த ஆபத்தை தரும் என்பதை உணர்ந்து அரசனிடம் விடைபெற்று காட்டிற்குச் சென்றார் முனிவர்.

லட்சுமி கடாட்சம் என்பதன் அர்த்தம் இப்பொழுது உங்களுக்கு புரிகிறதா குட்டீஸ்...

## பொது அறிவுத்துணுக்குகள்

- மனிதர்களுக்கு வாசனையை உணரும் மொட்டுகள் 50 இலட்சம் உள்ளன. பத்தாயிரம் வெவ்வேறு விதமான வாசனைகளை நம்மால் பிரித்து அறிய முடியும்.

- உயிர் வாழ்வதற்கு எல்லா உணர்வுகளும் வேண்டும் என்பதில்லை. செடிகள் வெளியிடும் கரியமில வாயுவை உண்டு வாழும் ஒரு புழு உள்ளது. அதற்கு அந்த ஒரு வாசனை மட்டுமே தெரியும்.

- ஒவ்வோர் உயிரினமும் தம் உடலிலிருந்து தனித்தனி வாசனையைக் காற்றில் கலக்கிறது. வண்ணத்துப்பூச்சி தனது வாசனையால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தனது இணையைக் கவரும்.

- சூரியனின் புறஊதாக் கதிர்களை தேனீக்கள் உணர்கின்றன. சூரியன் இருக்குமிடத்தை வைத்து, தம் கூட்டுக்குத் திரும்பும் திசையை அவை தெரிந்துகொள்கின்றன.

ஏன்டா பக்கத்துப் பையனைப் பார்த்துப் பார்த்து பரீட்சை எழுதுற?

பரீட்சையை நல்லா பார்த்துப் பார்த்து எழுதுன்னு எங்க அப்பா தான் சொன்னார் சேர்!




உன்னைவிட சின்னப் பையனை எதுக்குடா அடிச்சாய்?

கையை நீட்டு...?

நீங்களும் அதே தப்பைத்தான் சேர் பண்றீங்க...!

## விடுகதைகளும் விடைகளும்

- வகை வகையாய் தெரியும் வண்ணப்படம், கண் மூடிக் காணும் காட்சிப்படம். அது என்ன?

  கனவு

- மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன். அது என்ன?

  நத்தை

- மூன்றுகால் குள்ள அக்கா, பாரம் தாங்கி, நெருப்பை சுமந்து சோறு சமைப்பாள். அவள் யார்?

  அடுப்பு

- பட்டனைத் தட்டினால் சட்டென விரியும். அது என்ன?

  குடை

- நீரிலும் நிலத்திலும் வாழ்வான், பாறைக்குள்ளும் பதுங்கி வாழ்வான். அவன் யார்?

  தவளை

நான் சாகடிக்கப்படலாம்.
ஆனால் ஒருபோதும் தோற்கடிக்கப்பட மாட்டேன்.
~ சே குவேரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்கள் கொல்லப்பட்டபோது முஸ்லிம் அரசியல்வாதிகள் மகிழ்வுற்றனர்

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களை யார் நினைத்தாலும் இனி பிரிக்க முடியாது என யாழ்ப்பாண முஸ்லிம் சிவில் அமைப்புத் தெரிவித்துள்ளது.

மேற்போந்த கருத்தைக் கேட்கும்போது, அழுவதா அல்லது சிரிப்பதா என்று புரியவில்லை.

இதை நாம் கூறும்போது முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்து இது என்று சிலர் கருதலாம்.

ஆனால் எந்த வகையிலும் இது முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்தன்று.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்த கையோடு அப்பாவி முஸ்லிம் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என முதலில் குரல் கொடுத்ததில் வலம்புரிக்குப் பெரும் பங்கு உண்டு.

இப்போதும் நாம் கூறுவது; தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தியது ஒரு குழுமம் அல்லது ஒரு கூட்டமாகவே இருக்க முடியும்.

இதைவிடுத்து ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்துவதும் அவர்களுக்கு இடுக்கண் செய்வதுமான செயலை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இந்த நாட்டில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என நினைக்கின்ற முஸ்லிம் சகோதரர்கள் இருக்கின்றார்கள்.

வன்னி யுத்தம் நடந்தபோது, தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை கண்டு துடித்த இஸ்லாமிய சோதரர்கள் நிறைய உளர்.

அதற்காக முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தனர். முஸ்லிம் சிவில் அமைப்புகள் வன்னி யுத்தத்தைக் கண்டித்தன என்று கூறுவது அடிப்படை நியாயமற்றது.

உண்மையில் வன்னி யுத்தம் நடந்தபோது, தமிழர்கள் கொல்லப்பட வேண்டும் என நினைத்த முஸ்லிம் அரசியல்வாதிகளே அதிகம்.

புலனாய்வுத் துறையில் சேர்ந்து தமிழ் இளைஞர்களைக் காட்டிக் கொடுத்து, விசாரணை என்ற பெயரில் தமிழ் இளைஞர்களைக் கொடுமைப்படுத்தியவர்களில் கணிசமானவர்கள் முஸ்லிம் புலனாய்வாளர்கள்.

இந்த உண்மைகளை ஒருபோதும் மறக்க முடியாது மறக்கவும் கூடாது.

தவிர, கிழக்கு மாகாணத்தில் இன்றுவரை தமிழினத்தை அழிப்பதில் முஸ்லிம் இனத்தின் ஒரு தரப்பினர் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

குறிப்பாக கிழக்கின் முக்கிய முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் தமிழினத்துக்கு எதிராகச் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல.

இதுவே உண்மை. இந்த உண்மைகள் சிலருக்குக் கசக்கலாம்.

யாருக்கெல்லாம் இந்த உண்மைகள் கசக்கின்றனவோ அவர்கள் இப்போது சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பலயீனப்பட்டவர்கள் என்பதை தமிழ் மக்களும் தமிழினம் வாழ வேண்டும் என நினைக்கின்ற அருமந்த முஸ்லிம் சகோதரர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக, தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டபோது ஆட்சியாளர்களுடன் நின்று கரகோசம் செய்த முஸ்லிம் அரசியல்வாதிகளை தமிழ் மக்கள்ஒருபோதும் மறக்கவும் மாட்டார்கள் மன்னிக்கவும் மாட்டார்கள்.

இந்த உண்மையை சந்தர்ப்பவாத முஸ்லிம் அரசியல்வாதிகளும் சில முஸ்லிம் அமைப்புகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், தமிழ் பேசும் மக்களை இனி யாராலும் பிரிக்க முடியாது என்று கூறுவதெல்லாம் சூழ்நிலை மாற்றமேயன்றி யதார்த்தமன்று.

## போர்க்குற்றங்கள் இனி இடம்பெறுவதைத் தடுக்க

# இன அழிப்புக்கு காரணமானவர்களை இனம்கண்டு சிறைக்கு அனுப்ப வேண்டும்

## கஜேந்திரகுமார் வலியுறுத்து

(கரணவாய்)

இலங்கையில் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட அநியாயங்கள் நடக்காமல் இருக்க வேண்டுமெனில் இரண்டு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒன்று, நடந்த இன அழிப்புக்கு செயற்பட்டவர்களை இனங்கண்டு சிறைக்கு அனுப்புதல் வேண்டும்.

இரண்டாவது, தமிழ்த் தேச அந்தஸ்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முனனாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு மருதங்கேணியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இன்று தமிழ் மக்களுக்கு சர்வதேச பாதுகாப்பு தேவை எனக் கோருவேர் அரசுக்கு ஆறு ஆண்டுகள் காலஅவகாசம் கொடுத்துள்ளனர்.

நாம் இரண்டு வருடத்திற்கு முன்னர் தமிழ் சிவில் சமூகம் இணைந்து ஒரு அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பித்திருந்தோம். அதில் நாம் இலங்கை இன அழிப்பு விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையிலிருந்து ஐ.நா பாதுகாப்புச்சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்த வேண்டும் எனக் கோரியிருந்தோம்.

அதுதான் எமக்கு சாத்தியமான விடயம் இதை விடுத்து தற்போது சர்வதேச பாதுகாப்பு கோருவது புற்றுநோய்க்கு வலி நிவாரணி கொடுப்பது போன்றது.

2010 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசிய நீக்கத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஊடாக சிங்கள அரசுகள்தான் செய்து வந்துள்ளன.

இதனை எதிர்த்து மக்கள் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முப்பது வீதமான வாக்குகளையே தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வழாங்கியிருந்தனர்.

மாற்றுத் தலைமையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் வாக்களித்திருந்தனர்.

இந்நிலையில்தான் தமிழ்த் தேசிய நீக்கம் இனி தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஊடாக இடம் பெறுவது கடினம்.

ஆகவே தமிழ்த் தேசிய நீக்கம் செய்ய முனைவோர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் ஊடாக செய்ய முன்வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை

### பார்வையிட்ட ஞானசார தேரர்

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை ஞானசார தேரர் நேரில் சென்று பார்வையிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நலம் தொடர்பாக விசாரித்தார்.

கடந்த ஈஸ்டர் ஞாயிறு நடத்தப்பட்ட பயங்கரவாத தற்கொலை குண்டுத் தாக்குதலில் 250ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் 500ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த பயங்கரவாத தாக்குதலை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இதுவரை 92ற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினரின் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாட சாலை அதிபர் திருமதி ம.புஸ்பராணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-30)

## ரிஷாத், அசாத், ஹிஸ்புல்லாவை பதவி விலக்க 24 மணி நேர அவகாசம்

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்கள் அசாத் சாலி, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரை பதவியில் இருந்த விலக்க 24 மணி நேர அவகாசம் வழங்குவதாக நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் அறிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் அவர்கள் பதவி விலக்கப்படாவிட்டால், நாடு முழுவதிலுமுள்ள பௌத்த பிக்குகளின் பிரதிநிதிகள் இந்த கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைப்பார்கள் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்த கோரிக்கையை ஏற்க மறுத்தால் மதத் தலைவர்கள், கல்வியியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், யுத்த வெற்றிக்கு பங்களித்தவர்களை இணைத்து போராடவுள்ளதாக அறிவித்துள்ளார். (ம-3)

## ரிஷாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஆதாரமற்றவை

### முசலி பிரதேச சபை ஏகமனதாக கண்டனத் தீர்மானம்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் சுமததப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் அதனை முசலி பிரதேச சபை வன்மையாக கண்டிப்பதாகவும் முசலி பிரதேச சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

முசலி பிரதேச சபையின் தவிசாளர் எம்.சுபியானால் நேற்றுக் காலை இடம்பெற்ற சபை அமர்வின்போதே இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தர்மானத்திற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பு, பொது ஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன ஆதரவளித்ததனால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (285)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### முதலில் உன்னை ஆராய்ந்து பார்

- கடவுளை நேராகப் பார்த்தவர்கள் இவ்வுலகில் இருந்தார்கள். இன்னும் இருக்கிறார்கள். ஒரு ஊருக்குப் போகாதவன், அந்த இடம் கிடையாது என்று சொல்ல முடியாது. கடவுள் என்பது அனுபவித்து உணர வேண்டிய அனுபவம்.
- பம்பரம் தானே ஆடுமா? அல்லது ஆட்டினால் ஆடுமா? பம்பரத்தைச் சாட்டை வைத்தே நாம் ஆட்டு கிறோம். ஆனால், இவ்வுலகமாகிய பம்பரத்தை சாட்டை இல்லாமலே ஆட்டுகிறான் இறைவன்.
- பானை செய்ய முதற்காரணம் மண் அதை செய்ய காரணம் குயவன் துணைக்காரணம் தண்டச்சக்கரம். அதுபோல உடலாகிய பானையை, சக்தியாகிய துணைக் காரணம் கொண்டு, பானை செய்ய காரணமாக இருக்கி ன்ற சிவபெருமான் மாயையைக் கொண்டு பழனை செய்கிறார்.
- பானையைக் கண்டதும், அதைச் செய்த குயவனின் நினைவு வருவதைப்போல, உலகத்தைக் கண்டதும் இவ்வுலகத்தைப் படைத்த இறைவன் நினைவுக்கு வர வேண்டும்.
- அணுவை ஆராய்கிறான் மனிதன். வான மண்டலங்களை ஆராய்கிறான். சந்திரனை ஆராய்கி றான். ஆனால், தன்னை ஆராயவும் சிந்திக்கவும் மறுக்கிறான். நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? நாம் பூமியில் பிறந்ததன் நோக்கம் என்ன என்று ஒவ்வொருவரும் சிந்தித்தால் கடவுளைப் பற்றி ஞானம் வந்துவிடும்.

# சம்பியன் பட்டம் வென்றது சைனிங்ஸ்




வல்வை விளையாட்டுக்கழகம் நடத்திய வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் கிண்ணத்தை வென்றது சைனிங்ஸ் அணி.

சைனிங்ஸ் அணி அரையிறுதியாட்டத்தில் நேதாஜி அணியை வெற்றி கொண்டு இறுதி ஆட்டத்தில் றெஜின்போ அணியுடன் மோதியது.

இப்போட்டியில் முற்பாதியில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் போடவில்லை.

சூடு பிடித்த இரண்டாம் பாதியிலும் கோல் போடும் வாய்ப்புக்கள் இரு அணியின் பின்கள வீரர்களினால் முறியடிக்கப்பட ஆட்டம் 0:0 என சமனிலையில் முடிவடைந்தது.

வெற்றியைத் தீர்மானிக்கும் சமனிலை தவிர்ப்பு உதையில் அபிநயனின் சாதுரியமான கோல்காப்பும் வீரர்களின் சிறப்பான உதைகள் மூலம் சைனிங்ஸ் அணி 4 : 3 என வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இறுதிப்போட்டி ஆட்டநாயகனாக சைனிங்ஸ் அணியின் செந்தூரன், தொடரின் சிறந்த விளையாட்டு வீரனான பிரசாந், தொடரின் சிறந்த கோல்காப்பாளராக அபிநயன், தொடரின் சிறந்த பின்கள வீரனாக றெஜின்போ அணியின் பிரகாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# கிளி.மாவட்ட பிரதேச இளைஞர் விளையாட்டு கரைச்சி பிரதேச இளைஞர் அணி சம்பியன்



கிளிநொச்சி மாவட்ட பிரதேச இளைஞர் அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் கரைச்சி பிரதேச இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

கிளிநொச்சி மாவட்ட பிரதேச இளைஞர் அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டிகள் கடந்த சனிக்கிழமை முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச இளைஞர் அணியை எதிர்த்து பூநகரி பிரதேச இளைஞர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பூநகரி பிரதேச இளைஞர் அணி 30 பந்துகளில் 5 விக்கெட்டுகளை பறிகொடுத்து 2 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் நிதுஷா, சவின்சலா ஆகியோர் ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரைச்சி பிரதேச இளைஞர் அணி 28 பந்துகளில் 6 பறிகொடுத்து 3 ஓட்டங்களைப் பெற்று 2 இலக்குகளால் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

அவ்வணி சார்பில் தனுசிகா 2, தனுப்பிரியா ஒரு ஓட்டத்தையும் பெற்றனர். (க-60)

# வளர்மதி அணியை வீழ்த்தி நியூ பவர் அணி சம்பியன்



தென்மராட்சி சாவகச்சேரி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திய "கனகரத்தினம் செல்வராஜா ஞாபகார்த்த சுற்றுத்தொடர்" நேற்று முன்தினம் 27 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா,ஆசிரியர் பிரதாப், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் வாமதேவன், தமிழ் cnn இயக்குநர் அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வளர்மதியுடனான இறுதிப் போட்டியில் நியூபவர் விளையாட்டுக்கழகம் மோதி திரில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை நியூபவர் விளையாட்டுக்கழகம் சுவீகரித்தது.

போட்டியின் ஆட்டநாயகன், தொடராட்ட நாயகன், சிறந்த பந்துவீச்சாளர் , துடுப்பாட்ட வீரன் உட்பட 9 விருதுகளை அருண் பிரியன் பெற்றுக் கொண்டதுடன் சகலதுறை வீரனாக ரெனோயன் தெரிவு செய்யப்பட்டார். (க-29)

# கிறாஸ்கொப்பர்ஸ் பிறிமியர் லீக் ஏ.பி இராகுலன் 91 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம்

கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் கிறாஸ்கொப்பர்ஸ் பிறிமியர் லீக்கின் நான்காவது பருவ காலத்திற்கான போட்டிக்கான ஏலம் எடுக்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி இரவு வலம்புரி ஹோட்டலில் நடைபெற்றது.

அணிக்கு 6 பேர் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட வன்பந்தாட்ட கிரிக்கெட் தொடரானது கடந்த 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

றில்கோ றைடர்ஸ், வேலணை வேங்கைகள், அக்கிறிலீவ் போய்ஸ், ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் மற்றும் நோர்த் றாகன்ஸ் என 6 அணிகளுக்காக வீரர்கள் ஏலம் எடுக்கப்பட்டனர்.

வீரர்களின் ஆரம்ப ஏலத்தொகை 5 ஆயிரம் ரூபாவாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில், ஏலம் நடைபெற்றது. ஏலத்தில், அதிகூடிய தொகைக்கு ஏபி அணியின் கே.இராகுலன், அக்கிறிலீவ் போய்ஸ் அணியினால் 91 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டார். ஜொலிஸ்ரார்ஸ் அணியின் ஏ.ஜனார்த்தனன் 60 ஆயிரம் ரூபாய்க்கு ஜப்னா பந்தேர்ஸ் அணியினால் ஏலம் எடுக்கப்பட்டார்.

**அக்கிறிலீவ் போய்ஸ்**

எல்.ஆதீத்தன் (ஏபி - தக்கவைத்த வீரர்), ஆர்.மதுசன் (கிறாஸ்கொப்பர்ஸ் 10,500 ரூபாய்), எஸ்.உத்தமக்குமரன் (ஏபி 4000 ரூபாய்), பி.டர்வின் (சென்றலைட்ஸ் 26,000 ரூபாய்), கே.இராகுலன் (ஏபி 91,000 ரூபாய்), ஜெ.ஜெனந்தன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 46,000 ரூபாய்), கே.சுஜாந்தன் (யூனியன்ஸ் 57,000 ரூபாய்), வரலக்ஸன் (கிறாஸ்கொப்பர்ஸ் 5000 ரூபாய்), சஞ்சயன் (ஸ்கந்தா ஸ்ரார்ஸ் 5000 ரூபாய்), எஸ்.கிரிசன் (கிறாஸ்கொப்பர்ஸ் 5000 ரூபாய்).

**ஜப்னா பந்தேர்ஸ்**

எம்.மோகன்ராஜ் (யூனியன்ஸ் - தக்க வைத்த வீரர்), என்.ஜனுஸன் (கிறாஸ்கொப்பர்ஸ் 5000 ரூபாய்), ஏ.சஞ்சயன் (ஜொனியன்ஸ் 27,500 ரூபாய்), வி.வாமனன் (ஜொலிஸ்ரார்ஸ் 26,000 ரூபாய்), எஸ்.சயந்தன் (ஸ்கந்தா ஸ்ரார்ஸ் 21,500 ரூபாய்), எஸ்.சிவராஜ் (திருநெல்வேலி கிரிக்கெட் 40,000 ரூபாய்), ஏ.ஜனார்த்தனன் (ஜொலிஸ்ரார்ஸ் 60,000 ரூபாய்), டி.டன்ஸியஸ் (பற்றீசியன் 5000 ரூபாய்), பி.பிருந்தாபன் (ஜொனியன்ஸ் 10,000 ரூபாய்), எஸ்.பிரசன்னா (ஜொலிஸ்ரார்ஸ் 15,500 ரூபாய்).

**றில்கோ றைடர்ஸ்**

ஜி.றதீஸன் (பற்றீசியன் அணி - தக்கவைத்த வீரர்), எஸ்.சாரங்கன் (கிறாஸ்கொப்பர்ஸ் - 5000 ரூபாய்), கே.சந்தோஸ் (ஜொலிஸ்ரார்ஸ் - 18,000 ரூபாய்), கே.மதுசன் (ஜொலிஸ்ரார்ஸ் - 5000 ரூபாய்), டி.பயற்றிக் (பற்றீசியன் 5000 ரூபாய்), ஜி.ஜெரிக்து சாந்த் (சென்றலைட்ஸ் - 41,000 ரூபாய்), எஸ்.நிரோசன் (ஓல்ட் கோல்ட்ஸ் - 16,000 ரூபாய்), ரி.பிரியலக்ஸன் (ஓல்ட்கோல்ட்ஸ் - 26,000 ரூபாய்), எஸ்.அனுரதன் (திருநெல்வேலி கிரிக்கெட் - 5000 ரூபாய்), எல்.ஆகீசன் (யூனியன்ஸ் - 5000 ரூபாய்).

**வேலணை வேங்கைகள்**

கே.செல்ரன் (சென்றலைட்ஸ் - தக்க வைத்த வீரர்), எம்.சுஜீவன் (கிறாஸ்கொப்பர்ஸ் 6500 ரூபாய்), எம்.ஜனோசன் (சென்றலைட்ஸ் - 5000 ரூபாய்), வி.மணிவண்ணன் (ஜொலிஸ்ரார்ஸ் 11,000 ரூபாய்), ஜி.லிங்கநாதன் (ஏபி - 5000 ரூபாய்), ரி.சத்தியன் (கே.சி.சி.சி. 55,000 ரூபாய்), ஈ.ஜெயரூபன் (கே.சி.சி.சி. 24,500 ரூபாய்), வை.தீபநாதன் (திருநெல்வேலி 5000 ரூபாய்), பி.நிரோஜன் (சென்றலைட்ஸ் 5000 ரூபாய்), ரி.துஸியந்தன் (கே.சி.சி.சி. 5000 ரூபாய்).

**ஜப்னா பந்தேர்ஸ்**

ரி.பிரதீப் (ஹாட்லியைற்ஸ் - தக்க வைத்த வீரர்), ரி.டிலோசன் (கிறாஸ்கொப்பர்ஸ் 5000 ரூபாய்), எஸ்.வினோத் (மானிப்பாய் பரிஸ் 5000 ரூபாய்), எஸ்.அஜந்த் (றைரோன் 12,000 ரூபாய்), ரி.சேந்திரன் (றைரோன் 6000 ரூபாய்), என்.நந்தகுமார் (றைரோன் 5000 ரூபாய்), எஸ்.கிரிதரன் (ஹாட்லியைற்ஸ் 5000 ரூபாய்), உதயசாந்த் (றைரோன் 10,000 ரூபாய்), கே.பானுஜன் (கே.சி.சி.சி.6500 ரூபாய்).

**நோர்த் றாகன்ஸ்**

பி.ஸ்ரீகுகன் (ஓல்ட்கோல்ட்ஸ் - தக்கவைத்த வீரர்), எஸ்.அஜித் (கிறாஸ்கொப்பர்ஸ்), என்.சுவேந்திரன் (திருநெல்வேலி கிரிக்கெட் 44,000 ரூபாய்), ஜெ.சாகித்தியன் (ஹாட்லியைற்ஸ் 30,500 ரூபாய்), எஸ்.மதுசன் (ஓல்ட்கோல்ட்ஸ் 5000 ரூபாய்), கே.ஜனுதாஸ் (கே.சி.சி.சி. 12,500 ரூபாய்), ஜே.கல்கோவன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 5000 ரூபாய்), வை.கிருபாகரன் (றெஜின்போ 5000 ரூபாய்), கே.கபில்ராஜ் (ஜொனியன்ஸ் 5000 ரூபாய்), எம்.நிதுசன் (பற்றீசியன் 5000 ரூபாய்). (க-26)

# பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நடுவர் சங்கத் தெரிவு

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நடுவர் சங்கத்தின் புதிய செயற்குழு தெரிவு அண்மையில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக மு.நவநேசன், உபதலைவராக த.தங்கரதீஸ், செயலாளராக சி.ஜிவிந்தன், உபசெயலாளராக த.ரஜிகரன், நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.உதயராசன், க.ரவீந்திரன், ம.பிரான்சிஸ், து.அரியதரன், வி.கிருஸ்ணகரன், ம.சுரேஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-60)

## பாராளுமன்றத்...

ஏனைய விடயங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு இன்று காலை முதற் தடவையாக கூடவுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியிலுள்ள குழு அறை 3 இல் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை, இவ்விவகாரம் குறித்து அலசி ஆராயப்படவுள்ளது என ஆளுந்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமர்வில் கலந்துகொண்டு, செய்திகளை திரட்டுவதற்காக முதற்தடவையாக ஊடகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பான செய்திகளை நேரடியாக திரட்டுவதற்கு இதற்கு முன்னர் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, 21/4 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்று கூட்டு எதிரணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அறிவித்துள்ளன. (ம-3)

## தெரிவுக்குழுவா...

பீடத்தின் தலைமை பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்றைய தினம் மெதகம தம்மானந்த தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இந்திய தேசிய...

காரிகள் குழு ஒன்று இலங்கை வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகள் இந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்பு குறித்த விபரங்களை அறியும் நோக்கில் இந்த குழு இலங்கை வந்துள்ளது.

ஒருவாரகாலம் இலங்கையில் தங்கவுள்ள அந்த குழு அதற்கு தேவையான விபரங்களை சேகரிக்கும் என்று குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாதிகளது ஆதரவாளர்கள் சிலர் கடந்த காலங்களில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து சென்றதாக கூறப்படுகிறது.

அவர்கள் தற்கொலைத் தாக்குதல்தாரிகளுடன் ஏதேனும் தொடர்புகளை பேணியுள்ளனரா? என்ற அடிப்படையில் இந்திய புலனாய்வு பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ம-3)

## அமைச்சர் ரிஷாத்...

தாக்குதலுக்குப் பின்னரான சூழலில் தாக்குதல் தாரிகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மட்டுமன்றி கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் முஜீபுர் ரஹ்மான் ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் அமைச்சர் ரிஷாத்துக்கு எதிராக கொண்டு வரப்படுகின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்றபோது அதற்கேற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு ஒன்றுகூடி முடிவெடுக்கும். நாங்கள் அவசரப்படவில்லை. நிதானமாக முடிவெடுப்போம் என்றார். (ம-3)

## சிறுபான்மையி...

கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அக்காலப்பகுதியில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் காட்டுமிராண்டித்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

அதேபோன்று 2019ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மருமகனான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் கண்டி திகன மற்றும் குருநாகல் குளியப்பிட்டிய இன முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டது.

கடந்த மகிந்த ஆட்சிக்காலத்தில் தர்கா நகர், பேருவளை ஆகிய பகுதிகளில் முஸ்லிம் மீதான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றாலும் ஓரிரு நாட்களில் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் இன முரண்பாடுகளைக் களைவதற்கான திட்டங்கள் ஏதும் இல்லாத சூழ்நிலையில் ஆட்சியை நீடிப்பதற்கான ஆயுதமாக இனக்கலவரங்கள் தோற்றுவிக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

## ரிஷாத்தை ஆதரி...

மைப்புக்கு 5 பில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் வன்னிக்கான ஜனாதிபதியின் விசேட இணைப்பாளருமான சமிந்த வாசல தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள அவரது காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடமாகாண பனை அபிவிருத்திக்கு என 5பில்லியன் ரூபாய் நிதியினை நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த தொகையில் 2.5 பில்லியன் நிதி தற்சமயம் வழங்கப்பட்டுள்ளதுடன் மிகுதி பணமும் வழங்கப்படும். ஆனால் வடமாகாண குடிநீர் வசதிகளுக்கு வெறும் 5 மில்லியன் ரூபாய் பணத்தையே ஒதுக்கியுள்ளார்.

வடமாகாணத்தில் பாரிய ஓர் பிரச்சினை மக்களின் குடிநீர் பிரச்சினையே இதற்கு வெறும் 5மில்லியன் பணம் போதுமாக இருக்குமா? தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இந்த நிதியானது எதிர்வரும் தினங்களில் பாராளுமன்றில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிர்த்து அமைச்சருக்கு ஆதரவளிப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமானது பொது மக்களின் நலனை கருத்தில் கொள்ளாது தமது சுய அரசியல் இலாபத்திற்காக செயற்படுகிறதுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கள், வில்பத்து பிரச்சினை, குருநாகலில் வைத்தியரால் ஏற்பட்ட இன அழிப்பு போன்ற விடயங்களை சாதாரண விடயமாக மெழுகு பூசிக்கொண்டு தமது கட்சியின் எதிர்கால வளர்ச்சியை மட்டும் சுயநலமாக கருத்தில் கொண்டு செயற்படுகிறது எனத் தெரிவித்தார். (ம-250)

## குருநாகல் மருத்...

ஈதிராக நேற்றைய தினம் 67 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

57 முறைப்பாடுகள் குருநாகல் மருத்துவமனையிலும், 10 பேர் தம்புள்ள மருத்துவமனை மற்றும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். நேற்று முன்தினம் 52 பெண்கள் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர்.

குறித்த மருத்துவரால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நாள் முதல் தமக்கு குழந்தை வேறு இல்லாது போயுள்ளதாக குறித்த பெண்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் அந்த மருத்துவருக்கு எதிராக இதுவரை 119 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## 6 ஆயிரம் பெண்...

வைத்தியர்கள் 6ஆயிரம் சிங்கள பெண்களிற்கு கருத்தடை சிகிச்சை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இருந்து பெரதெனியா வைத்தியசாலையில் பணியாற்றிய இரண்டு வைத்தியர்கள் கருத்தடை சிகிச்சை மேற்கொண்டதாகவும், ஒரு வைத்தியர் தற்போது அம்பாறையின் கல்முனைக்கு இடமாற்றம் பெற்று சென்று விட்டதாகவும் தெரிவித்தார்.

சிராஜ் என்ற வைத்தியரும், இன்னொரு பெண் வைத்தியருமே இதை செய்ததாக குறிப்பிட்டுள்ளார். எனினும், அப்போதைய வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கபில குணவர்த்தன ஓய்வு பெறும் கட்டத்தில் இருந்ததாகவும், அவருக்கு இதில் தொடர்பில்லையென்றும் எம்.பி.திசாநாயக்க தெரிவித்தார். அந்த பெண் வைத்தியர் இப்பொழுது காணாமல் போய்விட்டார்.

குழந்தை பிரசவித்த பின்னர், அந்த பெண்கள் இன்னொரு குழந்தையை பிரசவிக்க விரும்பவில்லையென வைத்தியசாலையில் குறிப்பிட்டே சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக எம்.பி தெரிவித்தார். (ம-3)

## வாள்வெட்டுக் கும்பல் மாங்குளம் பகுதியில் அட்டகாசம்!

### ஐந்து பேர் படுகாயம்

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வாள்வெட்டுக் கும்பலொன்று வீடு புகுந்து தாக்குதலில் ஈடுபட்டதில் பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாங்குளம் புதியகொலனியைச் சேர்ந்த சிவராசா என்பவரின் வீட்டுக்குள் வாள், கைக்கத்தி, கம்பி, பொல்லு முதலிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த கும்பல் அங்கிருந்தவர்களை சரமாரியாகத் தாக்கியதுடன் அங்கிருந்த பெறுமதியான பொருட்களையும் அடித்துடைத்து சேதமாக்கியுள்ளனர்

இவர்களது தாக்குதலுக்குள்ளான பெண்கள் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-281)

## நீராவியடிப் பிள்...




மீண்டும் நீராவியடி பிள்ளையார் ஆலயம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த சர்சைக்குரிய ஆலயம் தொடர்பான வழக்கு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டநீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைகளின் போது நீதிமன்று இம் மாதம் 6 ஆம் திகதி வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக கணதேவி தேவாலயம் என எழுதப்பட்டுள்ள பெயரை நீக்கி நீராவியடி பிள்ளையார் ஆலயம் என எழுதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டிருந்தது.

இந்த கட்டளை வழங்கப்பட்டு 20 நாட்களை கடந்துள்ள போதிலும் பொலிஸார் அதனை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் பௌத்த பிக்குவால் பிள்ளையார் ஆலயத்துக்கு மட்டும் புதிதாக இரண்டு சிசிரிவி கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் மன்றின் கவனத்துக்கு பிள்ளையார் ஆலய நிர்வாகம் சார்பாக மன்றில் வாதாடிய சட்டத்தரணிகளால் சுட்டிகாட்டபட்டது .

இதனையடுத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரியை மன்றுக்கு அழைத்த மாவட்ட நீதிபதி சம்பவங்கள் குறித்து வினவியதுடன் உடனடியாக பெயரை மாற்றி எழுதுமாறும் பௌத்த பிக்குவால் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமராக்களை உடனடியாக அகற்றுமாறும் கட்டளையிட்டார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை பெயர் நீராவியடி பிள்ளையார் ஆலயம் என மாற்றி எழுதப்பட்டுள்ளது. ஆனால் சிசிரிவி கமராக்களை நேற்று முன்தினம் பௌத்த பிக்கு அகற்ற சம்மதிக்காத நிலையில் நேற்றைய தினம் அவை பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பனை அபிவிருத்தி நிதியம் கட்சி சார்ந்து அமையக்கூடாது

## வடமாகாண ஆளுநர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்தி நிதியம் மூலம் மக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களை மேற்கொள்ளும் போது அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும் என வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமரால் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிதியம் அதன் அபிவிருத்தி தொடர்பில் வடக்கு, கிழக்கிலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி மக்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட திட்டங்களை ஆராய்ந்து செயற்படுத்த வேண்டும் அதாவது வடக்கு மாகாண மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிர



ச்சினையான குடிநீர்ப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக வடமராட்சி கடல் நீரேரி திட்டப் பணிகளை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம். அபிவிருத்தி குறுகிய அரசியல் நோக்கத்திற்காகவும் கட்சி சார்ந்து செயற்படுவதாலும் மக்கள் நலத்திட்டங்களை புறந்தள்ளுவது ஏற்றுக் கொள்ள முடியாது என வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார். (ம-3-10)


மஹஜன சம்பத
திகதி 2019/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 5926
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 4 0 5 3 3

கொவிசெத
திகதி 2019.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 2131
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 21 39 60 79

செவண
திகதி 2019/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 187
ஆங்கில எழுத்து R
வெல்லப்பட்ட இலக்கங்கள் 27 58 60 66

நீரோகா லக்ன ஜய
திகதி 2019/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 551
லக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 27 36 40 72

## சென்.ஜோன்ஸ்...

உயிரிழந்ததுடன் அவரது சகோதரர்கள் இருவர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வயிற்றோட்டம் காரணமாக கடந்த 10ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்ட குறித்த மாணவன் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த மாண வன் கல்வி கற்கும் பாடசாலையுடன் தொடர்பு கொண்டபோது, குறித்த மாணவன் பாடசாலை ஆரம்பித்த நாளில் இருந்து பல நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை எனவும் கடந்த 24ம் திகதியே மாணவன் வயிற்றோட்டத் தால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவரது பெற்றோர் தம க்குத் தெரிவித்தாக தெரிவித்தனர்.

குறித்த மாணவன் மரணம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினரிடம் வினவியபோது, குறி த்த மாணவன் உட்கொண்ட கச்சான் பையில் காலாவதித் திகதி பொறிக்கப்பட்டிருந்ததாக வும் அவர் அன்றைய தினம் உட்கொண்ட முட்டையில் தமக்குச் சந்தேகம் ஏற்படுவதாக வும் தெரிவித்தனர்.

கோழி எச்சத்தில் காணப்படும் சன்ம நெல்லா என்ற ஒருவகைப் பற்றீரியா முட்டை யில் தொற்றியிருக்க கூடும் எனத் தாம் கருது வதாகவும், இந்த பற்றீரியா உடலில் சென்றி ருந்தால் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தவல்லது எனினும் உயிரிழந்த மாணவனின் இரத்த மாதிரிகளின் பரிசோ தனை அறிக்கை கிடைக்கும் வரை உறுதிப்ப டத் தெரிவிக்க முடியாதென சுகாதாரப் பகுதி யினர் தெரிவித்தனர். (ம-3-9-10)

## அடிப்ப...

நாட்டின் சட்ட த்தை அனைவரும் பின் பற்றி செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தற் போது நாட்டில் இய ங்கி வருகின்ற அடி ப்படைவாத கல்வி செயற்பாடுகள், சிறுவர் உரிமைகளை மீறு வதான இளவயது திருமண முறை போன்ற விடயங்கள் குறித்து பாராளுமன்றம் விரை வில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என வும் சபா நாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள திறைசேரி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற டீ.பீ.ஜயதிலக நினைவு தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார். (ம-3)

## கிளிநொச்சி மக்க...

கிளிநொச்சி மாவட்டத்தின் சமூக நிலை மைகள் குறித்தும் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அம்மக்க ளின் பொருளாதார நிலைமையினை மேம் படுத்த ஆளுநரால் மாகாணத்தினுள் மேற் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தின் பயன்பாட்டிலிருந்து தற் போது விடுவிக்கப்பட்டுள்ள விவசாய பண் ணைகள் மற்றும் மர முந்திரிகை தோட்டங் களை கூட்டுறவு முறையினூடாக அப்பிரதே சங்களின் மக்களுக்கு வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் பாராளுமன்ற உறு ப்பினரால் ஆளுநருக்கு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

வடமாகாணத்தின் தண்ணீர் மற்றும் காணிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆளுநர் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு தனது பூரண ஆதரவினை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மக்களுக்கு நன்மைபய்க் கும் ஆளுநரின் அனைத்து செயற்பாடுகளு க்கும் ஆதரவு வழங்குவதற்கு தயாராக இரு ப்பதாகவும் குறிப்பிட்டார். (ம-3)

## தளர்த்தியது இந்...

தியுள்ளது. புதுடில்லியில் நேற்று செவ் வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையி லேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊரடங்கு உத்தரவு மற் றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற் றும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டமை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள தாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இலங்கைக்கு பயணம் செய் யும் இந்தியர்கள் கவனமாகவும் அவதான த்துடனும் இருக்க வேண்டும் என்றும் எச்ச ரித்துள்ளது.

மேலும் இலங்கையில் எந்தவொரு உதவி தேவைப்படினும் இந்தியர்கள், கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகர் அலுவலகம், கண்டி யிலுள்ள உதவி உயர்ஸ்தானிகர் அலுவலகம், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள தூதரகங்கள் ஆகியவற்றுடன் தொட ர்பினை ஏற்படுத்தமுடியும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்தோடு கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் தொலைபேசி இலக்கங்களை +94772234176, +94777902082, +94112422788, +94112422789 அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

முன்னதாக சீனாவும் சுவிட்சர்லாந்தும் இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கைகளை தளர்த்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**சதாபொன்ஸ் கல்வி நிலையம்**
மாலி சந்தி, அல்வாய்
சிங்கள மொழி வகுப்புக்கள்
அரச சேவை, தனியார்துறை, A/L கற்ற மாணவர்களுக்கு சிங்கள மொழி பேச்சு (ORAL) சிங்கள வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் .
01.06.2019 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பம்
0212263206, 0779250105, 0773095176

**சிவப்பு மணல் விற்பனைக்கு**
பள்ள நிலங்களை சீர்செய்வதற்கும் கட்டட அத்தி பாரங்கள் நிரப்புவதற்கும், பூங்கன்றுகள் நாட்டுவ தற்கும் உகந்த சிவப்பு நிற மணல் மண் விற்ப னைக்கு உண்டு. தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே கொண்டு வந்து மிகக் குறைந்த விலையில் இறக்க முடியும்.
077 940 0963
(C-6512)

**Techno World**
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

01.06.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346, 077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

**வேலைவாய்ப்பு**
- அலுவலகப் பணியாளர் (தகைமை A/L வணிகத்துறை, விஞ்ஞானத் துறை - பெண்கள்)
- கமரா பொருத்துநர்
- கமரா பொருத்தும் பயிற்சி பெற விரும்புவோர்.

தொடர்பு : 077 552 7099
SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்
தகவல் தொழில்நுட்பம் & பாதுகாப்பு கருவிகள் வழங்குனர்
# 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
021 221 7994, 077 5527099 / 0703999388
sunsakthy.com info@sunsakthy.com sunsakthy traders

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(8880)

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

**உடனடி வேலைவாய்ப்பு**
Photoshop வேலை செய்யக்கூடிய ஆண்/பெண் இருபாலார்களும் விரும்பத்தக்கது. உடனடியாக சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.
**North Lanka IIT**
Top Floor, People's Bank Building
Stanly Road, Jaffna.
(C-6506)

**British College of Higher Studies**
BCHS
New Batches Start on 5th June 2019 at 9.00am
All courses with a valid certificate
Diploma in English – 6 months course
FROM 9 am – 12 am
Spoken English - 3 months
IELTS (Academic / General)
Life Skills (A1 & B1)
Sirambiyady Lane, Jaffna.
0212224550 / 0761380212

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
ஜேமன் சப்பட் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.
077 712 6536
(C-6501)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6332)

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**
070 330 5500
WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

**குறோஷியா, றோமானியா வேலைவாய்ப்பு**
தச்சுவேலை, கட்டடவாக்கப் பணியாளர்கள்
சம்பளம் ரூ.87,500 - ரூ.92,250
உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்
077 00 38 215, 0777 324 004, 021 221 9 221
எமரல்ட் ஐல் License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.